Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

இலவசப் பிரதி

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இலவசம்! இலவசம்!! இலவசம்!!!

பாடசாலை மாணவர்களுக்கான DSI சப்பாத்துக்கள் (SHOES) ஒவ்வொன்றிற்கும் ஒரு றபர் செருப்பு இலவசமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்

DSI பாதணிகளின்

யாழ்.குடாநாட்டுக்கான ஏக விநியோகஸ்தர்கள்

SUPER SHOES

சுப்ப சூஸ்

இல.75, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-414)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 மார்கழி 22 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 துல்கஃதா 02 (06.01.2003) திங்கட்கிழமை இதழ் : 97



நவம் அறிவுக்கூடத்தின் 10ஆம் நிறைவு விழாவில் பங்கேற்ற தேசியத் தலைவர் வே.பிரபாகரன் - லெப்.கேணல் நவத்தின் திருவுருவப்படத்திற்கு மலர்மாலை அணிவிக்கிறார்.

# முல்லைத்தீவுக் கரையோரமாக பறந்த இனந்தெரியாத விமானம்!

## கடற்படைப் படகுகள் அவதானித்தனவாம்

(கொழும்பு)

வட - கிழக்குக் கடற்பரப்பில் ரோந்துசென்ற கடற்படைப்படகுகள், முல்லைத்தீவுக் கடற்கரையோரமாக இலகுரக விமானங்கள் பறந்ததை அவதானித்துள்ளதாகக் கடற்படை அறிவித்துள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது,

கடந்த டிசம்பர் 29 ஆம் திகதி முல்லைத்தீவுக்கும் சாலைக்கும் இடையில் - கரையில் இருந்து ஒரு மைல் தொலைவில் இலகுரக மர்ம விமானமொன்று பறந்துசென்றது.

இரவு 11 மணிக்கும் நள்ளிரவுக்கும் இடையில் இந்த விமானம் பறந்ததை கடற்படையின் ரோந்துப் படகுகள் அவதானித்துள்ளன.

இரண்டு முறை இந்த இலகுரக விமானத்தின் பறப்பு அவதானிக்கப்பட்டது. இது இரண்டு விமானங்களா அல்லது ஒரே விமானந்தான் சென்று திரும்பியதா என்பது தெரியவில்லை எனக் கடற்படையினர் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

இந்த இனந்தெரியாத விமானத்தின் பறப்பு அவதானிக்கப்பட்டதும் கடற்படையினர் இது தொடர்பான தகவலை விமானப்படைக்குத் தெரிவித்தபோதும் -

விமானப்படையால் சந்தேகத்துக்குரிய எந்த விமானத்தையும் கண்டுபிடிக்க முடியவில்லை எனத்தெரியவருகின்றது.

# உயர் பாதுகாப்பு வலய விவகாரம்;

# இன்றைய பேச்சுக்களில் முதன்மை!

## நிகழ்ச்சி நிரலில் புலிகளின் கோரிக்கைப்படி மாற்றம்

(நகோன்பத்தம்)

**இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம் மற்றும் உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பான விடயங்களே இன்று ஆரம்பமாகும் அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான பேச்சுக்களில் முக்கிய இடம் வகிக்கின்றன.**

தாய்லாந்தில் நகோன்பத்தம் நகரில் இன்று ஆரம்பமாகும் நான்காவது சுற்றுப்பேச்சுக்கள், நான்கு நாட்கள் நீடித்து எதிர்வரும் வியாழனன்று முடிவடையும்.

இப்பேச்சுக்களில் -

தமிழீழ விடுதலைப்புலிகளின் தரப்பில் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம், தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், மூத்த தளபதி கேணல் கருணா, திருமதி அடேல் பாலசிங்கம், கலாநிதி ஜோய் மகேஸ்வரன், வழக்கறிஞர் வி.உருத்திரகுமாரன் ஆகியோர்

(10ஆம் பக்கம் பார்க்க)

## தெல்லிப்பளை உண்ணாவிரதம் மீண்டும் இன்று தொடர்கிறது!

வலி.வடக்கு மக்களின் மீள் குடியமர்வுக்கு அனுமதி கோரியும் உயர் பாதுகாப்பு வலயத்தை அகற்றும்படி கோரியும் இன்றும் தொடர்ச்சியான உண்ணாவிரதப் போராட்டம் நடைபெறவுள்ளது.

வலிகாமம் வடக்கு வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் ஏற்பாடு செய்திருக்கும் இவ் உண்ணாவிரதப் போராட்டத்தில், இன்று அனைத்துப் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளவிருக்கின்றனர்.

தெல்லிப்பளைப் பிரதேச செயலகத்துக்கு முன்னால் நடைபெறவுள்ள

(10ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்



வலியச் சேர்ந்து ஓடினவயாலேயே பிரச்சினை எக்கச்சக்கம். இதில கட்டாயமா வேற சேர்த்திட்டால்...

## குடாநாட்டுப் படையதிகாரிகளுடன் பிரதமர் ரணில் இன்று சந்திப்பு!

அதியுயர் பாதுகாப்பு வலய சர்ச்சை பற்றி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க படையதிகாரிகளுடன் இன்று ஆராயவுள்ளார்.

யாழ்.குடாநாட்டிலுள்ள உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சை குறித்தும் அதனைத் தீர்ப்பதற்கான வழிவகைகள் பற்றியும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க யாழ்.குடாநாட்டுப் படையதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ளார்.

அலரி மாளிகையில் இன்று காலை 8 மணியளவில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில், பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன மற்றும் முப்படைத் தளபதிகளும் கலந்துகொள்ளவிருக்கின்றனர்.

இந்த மாநாட்டில் படையதிகாரிகள் மற்றும் அமைச்சர்களின் கருத்

(10ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். வரும் ஜப்பானிய வெளியுறவு அமைச்சர்

(கொழும்பு நிருபர்)

ஜப்பானிய வெளியுறவு அமைச்சர் எச்.ஈ.யூரிக்கோ ஹவாக்குச்சி இன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இன்றுகாலை யாழ்ப்பாணம் வருகை தரவிருக்கும் இவர், யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் மனிதாபிமான மற்றும் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகள் குறித்து நிலைமைகளை நேரில் பார்வையிடுவார்.

## உயர் பாதுகாப்பு வலய பிரச்சினையால் அமைதி குழம்ப அனுமதிக்கமுடியாது!

### நாட்டு மக்களுக்கு பிரதமர் ரணில் உரை

உயர்பாதுகாப்பு வலயம் சார்ந்த பிரச்சினைகளால், அமைதி முயற்சிகள் குழப்பப்படுவதை அனுமதிக்க முடியாது என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

'சிரச' தொலைக்காட்சி வழியாக நேற்று நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அந்த உரையில் அவர் மேலும் தெரிவிக்கும்போது -

விடுதலைப் புலிகள் தமது ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு, சமஷ்டி முறையை ஏற்றுக் கொள்ள முன்வந்திருக்கிறார்கள். இது எமக்குக் கிடைத்த பெரும் வெற்றி.

இதன் தொடராக, இவ்வாண்டிலும் அமைதி வழிமுறைகள் மூலமாக பல வெற்றிகளை ஈட்டுவோம். தற்போது நாம் நிரந்தர சமாதானத்திற்கான தீர்க்கமான கட்டமொன்றில் நிற்கிறோம் எனவும் ரணில் தெரிவித்தார்.

## கட்டாய இராணுவ சேவை அமுலாக்கப்பட வேண்டும்!

### அமைச்சர் மிலிந்த அரசாங்கத்திற்கு ஆலோசனை

இலங்கையில் கட்டாய இராணுவ சேவையை அமுலாக்க வேண்டுமென, விஞ்ஞான, பொருளாதார மறுசீரமைப்புத்துறை அமைச்சர் மிலிந்த மொறகொட அரசாங்கத்திற்கு ஆலோசனை ஒன்றைச் சமர்ப்பித்துள்ளார்.

போரோ, யுத்தமோ - எது இலங்கையில் நிலவினாலும் - சமூக ஒழுங்கமைப்பைப் பேணுவதற்குக் கட்டாய இராணுவ ஆட்சேர்ப்பு அவசியமானதாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

இராணுவப் பாதுகாப்பு அக்கடமியின் வருடாந்த நிகழ்வு எதிர்வரும் 19 ஆம் திகதி நடைபெறும்போது - அமைச்சர் மிலிந்த இதற்கான அறிவிப்பை பகிரங்கமாக விடுப்பார் என நம்பகரமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

இது என்னுடைய திட்டம். அரசாங்கமே இதுபற்றி இறுதி முடிவு எடுக்க வேண்டும். பணக்காரர்கள் -

(10ஆம் பக்கம் பார்க்க)

# மக்கள் பிரிந்து செல்ல விரும்பினால் சர்வதேச சட்டங்கள் தடுக்கமுடியாது!

## குமார் நினைவுநாள் உரையில் வி.ரி.தமிழ்மாறன்

ஒரு நாட்டுக்குள்ளே இருக்கும் மக்கள் குழுக்கள் தாமாகவே தீர்மானித்து அந்த நாட்டிலிருந்து பிரிந்து போவதாக முடிவெடுத்தால், அவ்வாறு பிரிந்து செல்வதைச் சர்வதேச சட்டங்கள் தடுக்கமாட்டாதென கொழும்புப் பல்கலைக்கழகச் சட்டபீட விரிவுரையாளர் வி.ரி.தமிழ்மாறன் தெரிவித்தார்.

நேற்று யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற மாமனிதர் குமார் பொன்னம்பலம் நினைவு நிகழ்வில் சிறப்புரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தமது உரையில் மேலும், ஒரு நாட்டுக்குள் இருக்கும் மக்கள் குழுக்கள் அது மாநிலங்களாகவோ, பிராந்தியங்களாகவோ எத்தகைய குழுக்களாகப் பிரிந்திருந்தாலும், அவை தாமாகவே தீர்மானித்து அந்த நாட்டிலிருந்து பிரிந்துசெல்ல முற்பட்டால் அதனைச் சர்வதேச சட்டம் தடுக்கவில்லை.

கனடாவின் கியூபெக் மாநிலம் தொடர்பாக அந்நாட்டின் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பே இது.

மேற்படி நீதிமன்றத் தீர்ப்பு கனடாவில் பல்வேறு சர்ச்சைகளை உருவாக்கியது. கியூபெக் மக்களைப் பிரிந்து செல்லும்படி சர்வதேசச் சட்டம் சொல்லவில்லை. அதேநேரம் சர்வதேசச் சட்டம் அவர்கள் பிரிந்து செல்வதைத் தடுக்கவும் இல்லை என்று ஆணித்தரமாக அறிஞர்கள் கூறிய கருத்துக்களின் அடிப்படையில் கனேடிய உயர் நீதிமன்றம் அத்தீர்ப்பினை வழங்கியிருந்தது.

"ஆள்புல ஒருமைப்பாடு", "இறைமையைப் பாதுகாத்தல்" என்று அடிக்கடி உச்சரிக்கின்ற விடயங்கள் பற்றிச் சொல்லுகின்றபோது, மேற்படி தீர்ப்பிலே கூறப்பட்டதைப்போல ஒரு நாட்டினுடைய ஆள்புல ஒருமைப்பாடு என்பது, மற்றைய நாடுகளால் மதிக்கப்பட வேண்டுமே தவிர, அந்த நாட்டுக்குள்ளே இருக்கும் மக்கள் அந்த ஆள்புல எல்லையை மாற்ற நினைத்தால் அதனை சர்வதேசச் சட்டம் எபபடித் தடுக்கமுடியும்? எனக் கேள்வி எழுந்தது.

ஆகவே, இந்த ஆள்புல ஒருமைப்பாடு என்ற விடயம் - சர்வதேச சட்டத்தைப் பொறுத்தளவில் ஏனைய அரசுகள் அதில் தலையிடக்கூடாது என்பதற்காகவே முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

ஒரு நாட்டுக்குள் நடைபெறுகின்ற ஆயுதப்போராட்டம் வெளிநாட்டு சக்திகளினால் தூண்டப்பட்டிருக்காவிட்டால், வெளிநாட்டு சக்திகளின் நேரடிச் சம்பந்தம் இருக்காவிட்டால்- அந்த ஆயுதப்போராட்டத்தின் மூலம் அந்த நாட்டினுடைய எல்லைகள் மாற்றப்படுவது சர்வதேசச் சட்டத்தால் தடுக்கப்படவில்லை.

தற்போது நடைபெற்றுவருகின்ற சமாதானப் பேச்சுவார்த்தைகளின் போது - சுயநிர்ணய உரிமை பற்றியும், அதிலேயும் உள்ளக சுயநிர்ணய உரிமையென்றும் வெளியக சுயநிர்ணய உரிமையென்றும் பேசப்பட்டு வருகின்றது.

உள்ளக சுயநிர்ணய உரிமை என்பதன் மூலமும் வெளியக சுயநிர்ணய உரிமை என்பதன் மூலமும் நாங்கள் ஒன்றைத்தான் வலியுறுத்துகின்றோம். மக்கள் தாங்கள் ஒரு குறிப்பிட்ட பிரிவைச் சார்ந்தவர்கள் என்பதற்காக - இனம், மதம், மொழி, கலாசாரம் எந்த அடிப்படையில் இருந்தாலும் அந்தக்குழுவைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக - ஆட்சி முறைமையில் சமமாகப் பங்கெடுப்பதற்கான உரிமை மறுக்கப்படுமாக இருந்தால், தங்களுடைய அந்த ஆட்சியுரிமையை பெற்றுக்கொள்வதற்காகப் போராடுவது நியாயப்படுத்தப்படக்கூடியது.

இப்படியான போராட்டத்தை சட்ட விரோதமானது என்று கூறுவதற்கு எந்தவிதமான அடிப்படைக் காரணங்களுமில்லை.

தற்போது கூட்டாட்சி பற்றி நடாத்தப்படுகின்ற பேச்சுவார்த்தையின் சாராம்சம் என்னவென்றால், இந்த ஆட்சி முறைமையில் பங்கெடுப்பதற்கு ஒரு குழுவுக்கு ஐம்பது வருடகாலமாக அதன் உரிமை மறுக்கப்பட்டு வந்திருக்கின்றது. இதற்கு நேரடியான அத்தாட்சி ஏதும் தேவையா? அல்லது இவற்றைவிட மேலும் ஏதாவது ஆதாரம் தேவையா? அங்ஙனம் ஆதாரங்கள் தேவையா இல்லையா என்பதைக் காட்டுவதற்குத்தான் தற்போதைய கூட்டாட்சி பற்றிய பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

கூட்டாட்சி முறைமை என்பது தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமையுடன் முரண்படுவதாகக் கருதமுடியாது. அல்லது - இதுவரைகாலமும் தமிழ்மக்களால் முன்வைக்கப்பட்ட கோட்பாடுகளான - தமிழ்மக்கள் ஓர் தேசிய இனம், அவர்கள் மரபுவழித் தாயகத்திற்கு உரித்துடையவர்கள், அவர்களுடைய சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதற்கு என்னவிதத்திலும் முரண்படாமல் - உள்ளக சுயநிர்ணய உரிமையைப் பெற்றுக்கொள்ளமுடியும் என்பது தற்போது சகலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகிறது என வி.ரி.தமிழ்மாறன் மேலும் தெரிவித்தார்.

# சாவற்கட்டில் ஐஸ் தொழிற்சாலை ஒரு கோடி ரூபா செலவில் அமையும்

(மானிப்பாய்)

வலிகாமம் தென்மேற்கு மானிப்பாய் பிரதேசசபைக்கு உட்பட்ட சாவற்கட்டுப் பகுதியில் வசிக்கும் மீனவர்களின் நன்மை கருதி, ஒரு கோடி ரூபா செலவில் ஐஸ் உற்பத்தித் தொழிற்சாலையொன்று அமைக்கப்படவிருப்பதாக சாவற்கட்டு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவர் ந.பொன்னம்பலம் தெரிவித்தார்.

இவ் ஐஸ் தொழிற்சாலை அமைப்பதற்கான நிதியினை, கடற்தொழில் நீரியல்வள அமைச்சு வழங்க முன்வந்துள்ளது.

கடந்த பல வருடங்களுக்கு முன்னர் குடாநாட்டில் 22 ஐஸ் உற்பத்தி தொழிற்சாலைகள் இயங்கி வந்தன. நாட்டில் ஏற்பட்டுள்ள போர்க்காலச் சூழ்நிலையைத் தொடர்ந்து, அனைத்துத் தொழிற்சாலைகளும் சேதத்திற்குள்ளாகின. இதனால் மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வந்தனர்.

நாட்டில் சமாதானச் சூழ்நிலை ஏற்பட்டுள்ளதைத் தொடர்ந்து மீன்பிடித்தொழிலில் மீனவர்கள் ஈடுபட்டு வருகின்றனர். ஆனால் - ஐஸ்கட்டிகள் இல்லாததன் காரணமாக இறால், கணவாய், நண்டு போன்ற கடல் உணவுகளைப் பதனிட முடியாமல் இருப்பதுடன் அவற்றின் விலையும் வீழ்ச்சியடைந்துள்ளது.

இந்நிலை குறித்து சாவற்கட்டு கடற்தொழிலாளர்கள் சங்கம் கடல்வள அமைச்சருக்கு தெரியப்படுத்தி உதவி வழங்கக் கோரியதன் பயனாக அமைச்சு நிதி வழங்க முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இத்தொழிற்சாலைக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் இம்மாத நடுப்பகுதியில் இடம்பெறுமெனவும் சங்கத்தின் தலைவர் தெரிவித்தார். (100)

# காணாமற்போன சிப்பாயைத் தேடிக் கடற்படையினர் சோதனை!

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பகுதியில் காவற்கடமையில் ஈடுபட்டிருந்த கடற்படைச் சிப்பாய் ஒருவர் கடந்த ஒரு வாரகாலமாக காணாமற்போயிருப்பதாகத் தெரியவருகிறது.

கடற்படைச் சிப்பாய் காணாமற்போனதைத் தொடர்ந்து, இப்பகுதிகளில் இருந்துவரும் வாகனங்கள் அனைத்தும், பொன்னாலைப் பகுதியில் கடமைபுரியும் கடற்படையினரால் சல்லடைபோட்டுத் தேடப்படுகின்றன.

(லி,கி)

# வரும் 17இல் பொங்குதமிழ் நிகழ்வு பல்கலையில் கலந்துரையாடல்கள்

(யாழ்ப்பாணம்)

பொங்கு தமிழ் நிகழ்வை எதிர்வரும் 17 ஆம் திகதி ஏற்பாடு செய்வது தொடர்பான கலந்துரையாடல்கள் யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெற்று வருகின்றன.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பொங்கு தமிழ் நிகழ்வின் 3 ஆவது வருட நிறைவு நிகழ்வினை நடத்துவது தொடர்பாகவே இக்கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன.

## கட்டைக்காட்டில் அகற்றப்படும் மிதிவெடிகள்

மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் கட்டைக்காடு, வெற்றிலைக்கேணிப்பகுதியில் மிதிவெடிகள் அகற்றும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ஆயுர்வேத மருந்துகள் விநியோகம்

(மானிப்பாய்)

வலிகாமம் மேற்கு மற்றும் தென்மேற்கு பிரதேசசபை ஆகியவற்றின் ஆயுர்வேத வைத்தியசாலைகளுக்கு ஆயுர்வேதத் திணைக்களத்தினால் கொழும்பிலிருந்து நேரடியாக ஒன்றரை லட்சம் ரூபா பெறுமதியான மருந்து வகைகள் வழங்கப்பட்டுள்ளன. (100)


## சிறு விளம்பரம்

### தேவை

மீன் பிடிக்கும் வலைக்கு சாயம போடும் கண்டல் பட்டை (காய்ந்தது) நல்ல விலைக்கு வாங்கப்படும்.

க.செ.கைலாசபிள்ளை அன் சன்ஸ், 76, பெரியகடை (மருந்துக் கடை), யாழ்ப்பாணம். (சி-411)

ராஜா யாழ்ப்பாணம்.





முரளி, ராதிகா சௌத்திரி, வடிவேல், மணிவண்ணன் நடித்த

சுந்தரா டிராவல்ஸ்

10.30, 2.30, 6.00

(சி-398)

நிறஞ்சனாஸ் சங்கானை

இன்று மட்டும்

வில்லன்

நாளை முதல்

உன்னை நினைத்து

11.00, 2.45, 6.00 (பு.நே.) (சி/397)


# விளையாட்டு

## 361 ஓட்டங்களைப் பெற்றாலே அவுஸ்திரேலியா வெற்றி பெறும்!



பிக்கெல்

ஆஷஸ் கிண்ண டெஸ்ட் தொடரின் இறுதிப் போட்டியின் இறுதி நாளான இன்று, அவுஸ்திரேலிய அணி வெற்றி பெறுவதற்கு 361 ஓட்டங்களைப் பெறவேண்டிய நிலையில் இருக்கின்றது.

இரண்டாவது இன்னிங்ஸில் இங்கிலாந்து அணி 9 விக்கெட் இழப்பிற்கு 452 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியிருந்தது. இங்கிலாந்து வீரர் மைக்கல் வோன் 183 ஓட்டங்களையும், நசார் ஹுசைன் 72 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்து வீச்சில் அவுஸ்திரேலிய வீரர்கள் பிறட்லீ, மக்கில் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு அவுஸ்திரேலிய அணி 432 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் நேற்று துடுப்பெடுத்தாடத் தொடங்கியது. அவுஸ்திரேலிய



மைக்கல் வகனின் சிறப்புமிகு துடுப்பாட்டம்.

அணி 5 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஹெய்டன், லாங்கர் ஆகிய முன்னணி வீரர்களை அடுத்தடுத்து இழந்தது.

ஆட்டம் நேற்று மாலை இடைநிறுத்தப்பட்டபோது, அவுஸ்திரேலிய அணி 3 விக்கெட்டுக்களை இழந்து 91 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இந்த டெஸ்ட் போட்டியில் அவுஸ் திரேலிய அணி வெற்றி பெறவேண்டுமாயின், மேலும் 361 ஓட்டங்களைப் பெறவேண்டும்.

## பாகிஸ்தானுடனான டெஸ்ட் தென்னாபிரிக்கா வெற்றி!

(கேப்ரவுண்)

தென்னாபிரிக்கா, பாகிஸ்தான அணிகளுக்கிடையே நடைபெற்ற இரண்டாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்க அணி ஒரு இன்னிங்ஸ் 142 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

தென்னாபிரிக்கா 6 விக்கெட் இழப்பிற்கு 620 ஓட்டங்கள் என்ற நிலையைத் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான், தனது முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 252 ஓட்டங்களைப் பெற்றது. இதில் தவ்பீக் ஓமர் 135 ஓட்டங்களைப் பெற்றார்.

தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸைத் தொடரப் பணிக்கப்பட்ட பாகிஸ்தான் அணி, தனது சகல விக்கெட்டுக்களையும் இழந்து 226 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக்கொள்ள முடிந்தது.

இரண்டு டெஸ்ட் போட்டிகள் கொண்ட இத்தொடரில் இரண்டிலும் தென்னாபிரிக்க அணி வென்று தொடரைத் தனதாக்கிக் கொண்டது. டெஸ்ட் ஆட்டத் தொடர் நாயகனாக மக்காயா என்ரினி தெரிவு செய்யப்பட்டார்.

## இன்றைய நாள் இனிய நாள்

**06-01-2003 - திங்கட்கிழமை**

| | |
|---|---|
| மேடம் | :- உறவினர் வருகை, குடும்பசுகம், தேகசுகம், நன்மதிப்பு, |
| இடபம் | :- பொருள் வரவு, வீண்பழி கேட்டல், காரியத்தடை. |
| மிதுனம் | :- அதிகாரம், மனைவி பிள்ளைகளால் நன்மை, வாகன சுகம். |
| கர்க்கடகம் | :- மனதில் நெருடல், மனபயம், பொருட்செலவு. |
| சிங்கம் | :- திருடரால் தொல்லை, உற்சாகம், பிரயாணக் கஷ்டம். |
| கன்னி | :- வெளியூர்ப் பிரயாணம், குடும்ப மகிழ்ச்சி, பூமியால் லாபம். |

**பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்**

| | |
|---|---|
| துலாம் | :- வாகன நஷ்டம், காலில் காயம், பொருட்செலவு. |
| விருச்சிகம் | :- பிரயாணத்தால் நன்மை, சுபகாரியம் கைகூடும், தொழில் சிறப்பு. |
| தனு | :- மனக்குழப்பம், பொருள் கைவிட்டுப்போகும், அதிக அலைச்சல். |
| மகரம் | :- விவாக முயற்சி வெற்றி பெறும், பெண்களால் நன்மை. |
| கும்பம் | :- நண்பர்கள் எதிரிகளாவர், உற்சாகமின்மை, பிரயாணத்தால் கஷ்டம். |
| மீனம் | :- தர்மம் செய்தல், பெண்களால் நன்மை, குடும்பச் சிறப்பு. |

# பருத்தித்துறை மெதடிஸ்ட் பாடசாலைக்கு சென்ற எம்.பிக்களைத் தடுத்த படையினர்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலைக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்களைப் படையினர் தடுத்து நிறுத்திய சம்பவம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவாஜிலிங்கம், ரவிராஜ் ஆகியோரும் மேற்படி பாடசாலையின் அதிபரும் நேற்றுமுன்தினம் நண்பகல் இப்பாடசாலைக்குச் சென்ற சமயம் அப்பகுதியில் கடமையில் இருந்த படையினர் அவர்களைத் தடுத்து நிறுத்தியுள்ளனர். இதன்போது படையினருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. சுமார் 15 நிமிடங்களுக்கும் மேலாக உள்ளே செல்வதற்கான அனுமதிக்காகக் காத்திருந்திருக்க வேண்டிய நிலமை நிலவியதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம் தெரிவித்தார். (க,80)


## துர்நாற்றம்

கீரிமலையிலுள்ள நீராடும் கேணிக்கு அருகில் கட்டப்பட்டுள்ள உடைகள் மாற்றும் அறைகளி னுள் சிலர் மலசலங்கழிப்பதால் அங்கு உடைகள் மாற்றுவதற்கும், பெண்கள் நீராடும் கேணிக்குச் செல்ல முடியாதவாறும் துர்நாற்றம் வீசுவதாக மக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

# பொடா சட்டத்தை ஆதரித்து ஒருபோதும் பேசவில்லை

## ம.தி.மு.க.பொதுச் செயலாளர் வைகோ பேட்டி

(சென்னை)



'பொடா' சட்டத்தை ஆதரித்து தாம் ஒருபோதும் பேசவில்லை என மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ தெரிவித்தார்.

வேலூர் சிறைச்சாலையிலிருந்து பூந்தமல்லி பொடா நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டபோது செய்தியாளர்களிடம் பேசியபோதே இதனைத் தெரிவித்தார்.

பாரதீய ஜனதாக்கட்சியின் பிரமுகரும், அமைச்சருமான அருண் ஜேட்லி கேட்டுக்கொண்டதன் பேரிலேயே, பொடா சட்டத்தின் சில கூறுகள் குறித்து விளக்கங்களை அளித்ததாகக் கூறிய வைகோ, ஆளும் பாரதீய ஜனதாக் கூட்டணியின் கூட்டத்தில் தாம் இச்சட்டத்தால் பொது மக்கள் பாதிப்புக்களை எதிர்கொள்வர் எனத் தெரிவித்ததாகவும் குறிப்பிட்டார்.

இதற்குப் பாரதீய ஜனதாக்கட்சியின் தலைவர்கள் இச்சட்டம் தவறாகப் பயன்படுத்தப்படமாட்டாது என உறுதிமொழி தந்ததாகவும் வைகோ தெரிவித்தார்.

# தமிழரைச் சுட்டுக் கொன்றுவிட்டு அலவாங்கால் குத்திய பொலிஸார்

## ஆறுபேர் கைதாகி விளக்கமறியலில்

தேடுதலுக்குச் சென்ற பொலிஸார் பொகவந்தலாவையில் தமிழர் ஒருவரைச் சுட்டுக்கொன்றுவிட்டு, ரவை துளைத்த இடத்தில் - அலவாங்கினால் குத்திவிட்டுச் சென்றமை தொடர்பாக ஆறு பொலிஸார் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது, பொகவந்தலாவப் பகுதியில் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபடுவோரைத் தேடிச் சென்ற பொலிஸார் - தமிழர் ஒருவரைச் சுட்டுக்கொன்றதாகச் சந்தேகிக்கப்படுகின்றது.

சுட்டுக்கொன்ற பின்னர், சுட்டுக் கொல்லப்பட்டவரின் உடலிலிருந்த ரவைத்துவாரத்தின் வழியாக அலவாங்கைக் குத்திவிட்டுச் சென்றுள்ளனர். சடலம் பின்னர் மீட்கப்பட்டுப் பிரேத பரிசோதனை செய்யப்பட்டபோதே, துப்பாக்கிச்சூட்டினால் மரணம் சம்பவித்ததாகத் தெரியவந்தது.

இதையடுத்து - அன்றையதினம் தேடுதல்பணிக்காகக் குறித்த பிரதேசத்துக்குச் சென்ற இரண்டு சப் இன்ஸ்பெக்டர்கள் உட்பட ஆறு பொலிஸார் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# அழிந்து கிடக்கும் பளைப்பகுதியை சீரமைக்க ரூ.45 லட்சம் தேவை!

## வரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து ஒதுக்கக் கோரிக்கை

(பளை)

முற்றாகச் சேதமடைந்த நிலையில் உள்ள பளைப் பிரதேசத்தினைப் புனரமைப்பதற்குப் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியிலிருந்து 45 லட்சம் ரூபா ஒதுக்கும்படி பளைப் பிரதேச செயலகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இங்குள்ள பொதுக் கட்டடங்கள், முக்கியமான வீதிகள், சனசமூக நிலையங்கள் மற்றும் பொது அமைப்புக்களின் கட்டடங்களும் முற்றாகப் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளன.

இவை யாவற்றையும் புனரமைப்புச் செய்து பழையநிலைக்குக் கொண்டுவர 45 லட்சம் ரூபா நிதி தேவைப்படுவதாகப் பளைப் பிரதேச செயலர் சு.புத்திரசிகாமணி தெரிவித்தார்.

கடந்த காலங்களில் தென்மராட்சிப் பகுதியில் ஏற்பட்ட யுத்த நிலைமைகளின்போது - ஷெல் வீச்சுக்கள் மற்றும் விமானத்தாக்குதல்கள் என்பவற்றிற்கு உட்பட்டு பாரிய அழிவுகள் பளைப்பகுதியில் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கது. (115)

## மதுபோதையில் தினமும் செய்துவந்த அட்டகாசம்

# மனைவி, பிள்ளைகளைத் தாக்கிய தந்தை யாழ். நீதிமன்றக் காவலில்!

மதுபோதையில் வீட்டிற்குச் சென்று மனைவியையும் பிள்ளைகளையும் தாக்கிய குடும்பஸ்தர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

யாழ்ப்பாணம் சீனிவாசன் வீதியில் நடைபெற்ற இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது -

ஐந்து பிள்ளைகளின் தந்தையான மேற்படி குடும்பஸ்தர் வேறு ஒரு பெண்ணுடன் முறைகேடான தொடர்பு வைத்திருந்தார். இதனால் கடந்த சில மாதங்களாக வீட்டிலிருந்து வெளியேறி உறவினர் வீட்டில் தங்கி வாழ்ந்து வருகின்றார்.

ஆனால் போதையில் - தினமும் தனது வீட்டிற்குச் சென்று - மனைவி பிள்ளைகளைத் தாக்கித் துன்புறுத்தியும் வந்தார்.

இதனால், பிள்ளைகளும் மனைவியும் யாழ்.பொலிஸ் நிலையத்தில் இயங்கும் பெண்கள் சிறுவர்கள் விசாரணைப்பிரிவிடம் முறையிட்டபோது - பெண்கள், சிறுவர்களை சித்திரவதைக்குள்ளாக்கிய சட்டத்தின் கீழ் யாழ். நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டதுடன் மேற்படி நபர் நீதிமன்றக்காவலில் வைக்கப்பட்டுள்ளார். (ச,கி)

# பளை மத்திய கல்லூரி மீண்டும் பழைய இடத்தில்

இதுவரை காலமும் வடமராட்சியில் இயங்கி வந்த பளை மத்திய கல்லூரி இன்று முதல் சொந்த இடத்தில் இயங்கவுள்ளது.

இம்மீள் ஆரம்ப வைபவத்தில் கிளிநொச்சி மாவட்டக் கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

கடந்த காலத்தில் முற்றாகச் சேதமடைந்திருந்த நிலையில் காணப்பட்ட இக்கல்லூரியில், தற்போது மூன்று தற்காலிக கொட்டகைகள் அமைக்கப்பட்டு வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. (45)

# பார்வைப்புலன் இழந்தோருக்கு மாதாந்தம் ஆயிரம் ரூபா உதவி!

## இந்து ஆலயங்கள் மூலம் வழங்க அமைச்சர் திட்டம்

குடாநாட்டிலுள்ள இந்து ஆலயங்கள் ஊடாக, பார்வைப்புலன் இழந்தவர்களுக்கு மாதாந்தம் உதவுதொகை வழங்கப்படவிருக்கின்றது.

இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் தெரிவித்தார்.

ஆலயங்கள் அமைந்துள்ள அந்தந்தப்பகுதியில் பார்வைப்புலன் இழந்தவர்களுக்கு மாதாந்தம் ஆயிரம் ரூபா வீதம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (ச,கி)

# குருநகர் பிரச்சினைகள்; பிரதமர் ரணிலுடன் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

குருநகர்ப் பகுதியில் அமைந்துள்ள இராணுவப் பாதுகாப்பு நிலைகளால், கடற்தொழிலாளர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக, இன்று பிரதமரைச் சந்தித்துப் பேச்சு நடாத்தவுள்ளதாக இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

புனர்வாழ்வு புனரமைப்பு அகதிகள் மீள்குடியேற்ற அமைச்சர் ஜெயலத் ஜெயவர்த்தன, பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள், மற்றும் படை உயரதிகாரிகள் இதில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இச்சந்திப்பில் குடாநாட்டிலுள்ள வைத்தியசாலைகளின் நிலைமைகள், இராணுவப் பாதுகாப்புப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள குருநகர்ப் பகுதியின் அபிவிருத்தி தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது. (ச)

# சிறான் செயற்பாடுகள் குறித்தும் தாய்லாந்தில் பேசப்படும்

வட- கிழக்குக்கான அவசர மனிதாபிமான மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகள் குறித்தும் அடுத்த கட்ட பேச்சுக்களின்போது ஆராயப்படவிருக்கிறது.

மேற்படி நடவடிக்கைக்ளுக்காகக் கிளிநொச்சியில் 'சிறான்' அலுவலகம் ஏற்கனவே ஆரம்பித்து வைக்கப்பட்டிருக்கிறது. எனினும் 'சிறான்' செயற்பாடுகள் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை.

எனவே - இதன் செயற்பாடுகளைத் துரிதப்படுத்துவதற்கும்,

செயலகத்தின் அனைத்துப் பணிகளையும் உறுதிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறது. தாய்லாந்துப் பேச்சுக்களின்போது இவ்விடயம் குறித்து விரிவாக ஆராயப்படவிருக்கிறது. (க)

# மீளக்குடியமர்ந்த மக்களுக்கு உலக வங்கி, நெதர்லாந்து உதவி

(கொழும்பு)

வடக்கு- கிழக்கு மாகாண மீள்குடியேற்ற நடவடிக்கைகளுக்காக உலக வங்கி 1,000 மில்லியன் அமெரிக்க டொலர்களையும், நெதர்லாந்து 250 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் வழங்கவுள்ளது.

வடக்கு- கிழக்கிலுள்ள 10,000 குடும்பங்களுக்கு நிகொட் நிறுவனம் மூலம் இந்த நிதி எதிர்வரும் பெப்ரவரி மாதம் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# 50 தாதியர் தேவைப்படுமிடத்து ஆறு பேர் மட்டுமே நியமனம்!

## மந்திகை மருத்துவமனையின் அவலநிலை

(யாழ்ப்பாணம்)

மந்திகை மருத்துவமனைக்கு கடந்த முதலாம் திகதி தொடக்கம் புதிதாக 6 தாதியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

எனினும் - இவ்வைத்தியசாலையில 50 இற்கும் மேற்பட்ட தாதியர்களுக்கு வெற்றிடங்கள் உள்ளதாக மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கதிரவேற்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இவ்வைத்தியசாலையில் நிலவும் தாதியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யாமையால் நோயாளர்களே பெரிதும் பாதிப்படைகின்றனர் என அவர் மேலும் கூறினார்.

இதேவேளை - யாழ். போதனா வைத்தியசாலைக்கு 45 தாதியர்கள் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

அச்சுவேலி வைத்தியசாலைக்கு இருவரும் தெல்லிப்பளை, காரைநகர், சங்கானை வைத்தியசாலைகளுக்கு 8 பேரும் புதிதாக நியமனமாகியுள்ளனர்.

இவர்களனைவரும் தாதியர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியை நிறைவு செய்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ச,கி,09)

# வானிலை அவதானிப்பு தொலைநோக்கி தென்மராட்சி மூலவள நிலையத்துக்கு!

தென்மராட்சி கல்வி வலயத்தினால், தென்மராட்சி கல்வி மூலவள நிலையத்திற்கு "வானிலை அவதானிப்புத் தொலைநோக்கிக் கருவி" ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

இக் கல்வி மூலவள நிலையம், சாவகச்சேரி இந்துக்கல்லூரியிலேயே அமைந்துள்ளதனால் இதற்கு இவ்வானிலை அவதானிப்புத் தொலைநோக்கிக்கருவி வழங்கப்பட்டுள்ளது. வடமாகாணத்திலே தென்மராட்சி வலயக்கல்வி மூலவள நிலையத்திற்கு முதன்முதலில் இக்கருவி வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (25)

# ராணுவம், மாற்றுக்குழுக்களுடன் இயங்குவோர் இயல்பு வாழ்வுக்குத் திரும்ப புலிகள் அழைப்பு

## மட்டு. அம்பாறை அரசியற்துறையினர் அறிவிப்பு

கொடிய யுத்தம் இடைநிறுத்தப்பட்டு ஓர் அமைதிச் சூழ்நிலை இப்போது தோற்றுவிக்கப்பட்டுள்ளது. காலம் காலமாக யுத்தப் போர்மேகம் ஆட்கொண்டிருந்தது. இந்நிலையில் மக்கள் நிம்மதியற்ற, சந்தோஷமற்ற, நிரந்தரமற்ற வாழ்க்கையினை வாழ்ந்து கொண்டிருந்தார்கள். உயிருக்கும், உடமைக்கும், சொத்துக்கும் உத்தரவாதமற்று வாழ்ந்தார்கள். எமது தேசியத் தலைவரின் நேர்த்தியான வழிநடத்தலால் செய்துகொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்பு இந்நிலைமை மாறி இப்போது மக்கள் இயல்பு வாழ்வினை வாழத் தொடங்கியுள்ளனர்.

எமது உரிமைப் போராட்டத்தில் 17,651 போராளிகள் தமிழ் மக்களின் விடுதலைக்காக தங்கள் இன் உயிர்களைத் தியாகம் செய்துள்ளனர். ஆனால் இந்த போராட்ட காலத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் இராணுவத்தினரால் கொலை செய்யப்பட்டுள்ளனர். விடுதலைக்காக வீழ்ந்த வீரர்களையும், எதுவும் அறியாமல் கொலலப்பட்ட மக்கள் தொகையையும் ஒப்பிடும்போது பன்மடங்கு மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

அமைதிச் சூழ்நிலை உருவாகி வெளிநாடுகளில் பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எனவே- இளைஞர்களே, நீங்கள் இனியும் இராணுவத்துடனும், மாற்று இயக்கத்தினருடனும் சேர்ந்திருந்து செயற்படுவதினை உடன்விட்டு இயல்பு வாழ்வுக்குத் திரும்புங்கள். விருப்பம் கொண்டால் எங்கள் விடுதலை இயக்கத்தோடு சேர்ந்து அரசியல் பணிகளில் ஈடுபட்டு கிடைத்துள்ள அமைதிச் சூழலுக்கு வலுச்சேர்த்து எமது மக்களின் அமைதியான, சுபீட்சமான வாழ்வுக்கு உழைக்க முன் வாருங்கள். உங்கள் வருகையினை எப்போதும் எதிர்பார்க்கிறோம்.

என தமிழீழ விடுதலைப்புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட அரசியற்துறையினர் விடுத்துள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அவர்கள் வெளியிட்டுள்ள - 'பிற இயக்கத்துடனும், இராணுவத்துடனும் செயற்படும் இளைஞர்களே, விழிப்புக் கொள்ளுங்கள்' எனும் தலைப்பிலான துண்டுப்பிரசுரத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

அண்மைக்காலமாக பலவிதமான நாடகங்கள் அரங்கேற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றன. நாட்டில் அமைதிச் சூழ்நிலை உருவாகி ஒரு வருடகாலம் கடந்து விட்டது. இந்தக் காலத்தில் உயிர், உடமை அழிவுகள் இல்லாமல் மக்கள் இயல்பு வாழ்வினை வாழத் தொடங்கியுள்ளார்கள்.

வெளிநாட்டில் நடைபெற்ற மூன்றாம் கட்டப் பேச்சுவார்த்தையும் நல்ல முறையிலும் முன்னேற்றகரமாகவும் நடைபெற்று முடிந்துள்ளது. மக்கள் அமைதியாக வாழ விரும்பாத, நாட்டில் ஏற்பட்டுள்ள சமாதானத்தினை விருப்பங் கொள்ளாத, சகித்துக் கொள்ளாத, விஷமத்தனம் பிடித்த விரோதிகள் மீண்டும் குழப்பத்தை ஏற்படுத்தி இன்னுமொருவரின் அடிவருடிகளாக இருக்க விரும்புகிறார்கள்.

இவர்கள் தங்களின் வாழ்வுக்காலத்தினை மட்டும் வாழ்ந்தால் போதும்- இவர்களின் உறவுகள், பிள்ளைகள், இளம் சமுதாயம் எதிர் காலத்தில் சுபீட்சமாக வாழ விருப்பம் கொள்ளாதவர்கள். அதனால் பலவகையான நாடகங்களை அரங்கேற்ற முற்பட்டுக் கொண்டேயிருக்கிறார்கள். அண்மைக் காலமாக தங்களது சகாக்களைக் காணவில்லை, விடுதலைப் புலிகள் கடத்தி விட்டார்கள், கொலைசெய்துவிட்டார்கள் என்று இன்னும் பல விஷமப்பிரசாரங்களைச் செய்துவருகிறார்கள்.

கடந்த காலத்தில் அக்கரைப்பற்றில் முஸ்லிம் இளைஞர் கடத்தல் நாடகம், செங்கலடியில் இரு இளைஞர் குண்டுடன் பிடிபட்ட நாடகம், நிவாஸ், தங்கராஜா, விஜி போன்ற தங்களது ஆட்களை கடத்தி விட்டார்கள் என்ற நாடகங்களை அரங்கேற்றம் செய்து கொண்டு வருகின்றார்கள்.

அன்பிற்கினிய மக்களே! நீங்கள் விழிப்புக் கொள்ளுங்கள், மக்கள் சுபீட்சமாக வாழவேண்டும், நிம்மதியாக வாழவேண்டும் என்பதில் எமது தலைவர் உறுதியாக உள்ளார். அதனால்தான் எமது தளபதிகள் வெளிநாட்டிற்குச் சென்று பேச்சு வார்த்தைகளைச் செய்கிறார்கள். எமது தலைவரின் நேர்த்தியான வழிநடத்தலிலே இந்தச் சமாதான முயற்சி முன் கொண்டு செல்லப்படுகினறது என்பதை நீங்கள் யாவரும் அறிந்த உண்மை.

அண்மையில் மண்டூரில் காணாமற்போய் பிணமாகக் கண்டெடுக்கப்பட்ட அழகுதுரை என்பவர், எங்களின் முழுநேர ஆதரவாளர் என்பது நீங்கள் அறியவேண்டிய உண்மை. இந்தச் சம்பவத்தினைப் பற்றி நாங்களும் அறிய முற்பட்டுக்கொண்டிருக்கின்றோம் என்பதை நீங்கள் நன்கு புரிந்து கொள்ளவேண்டும். எந்தெந்த விதத்திலெல்லாம் குழப்ப முற்பட்டுக் கொண்டிருக்கிறார்களோ தொடர்ந்தும் அதனையே செய்து கொண்டிருப்பார்கள். எனவே, மக்களாகிய நீங்கள் சமாதானத்திற்கு விரோதமானவர்களின் செயலுக்குச் சோரம் போகாமல் விழிப்பாக இருங்கள், இருக்க வேண்டுமென்று உங்களை வேண்டிக் கொள்கின்றோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சைவபரிபாலன சபை பண்ணிசைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையால் புண்ணிய நாச்சியம்மையார் தினத்தையொட்டி நடாத்தப்படும் பண்ணிசைப் போட்டி பெப்ரவரி மாதம் 9ம் திகதி நடைபெறவுள்ளது.

மூன்று பிரிவுகளாக நடாத்தப்படும் போட்டிகள் முதலில் வலய மட்டத்தில் நடத்தப்பட்டு,

அதில் முதல் மூன்று இடங்களைப் பெறுவோர் இறுதிப் போட்டியில் பங்குபெறுவர்.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய இறுதித் திகதி இம் மாதம் 24 எனவும்,

போட்டிக்குரிய பாடங்கள் அடங்கிய நூலை சைவபரிபாலன சபையில் பெற்றுக் கொள்ளலாம் எனவும் தேர்வுச் செயலாளர் வ. கந்தசாமி அறிவித்துள்ளார்.

(லி)


வாழ்க வளமுடன்

நமது ஈழநாட்டின் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

HAPPY BIRTHDAY

முதலாவது அகவையில்.



நேற்றைய தினம் பிறந்தநாளைக் கொண்டாடிய

பெயர் : த.சுந்தர்பவன்
முகவரி : சரசாலை வடக்கு, சாவகச்சேரி.

முதலாவது அகவையில்.



பெயர் : சி.ரதீஸ்கண்ணா
முகவரி: நெடும்புலம், சுன்னாகம்.

இரண்டாவது அகவையில்.



பெயர் : கே.அபிஷாரணி
முகவரி : 5 ஆம் வட்டாரம், நெடுந்தீவு மேற்கு.

நாலாவது அகவையில்.



நேற்றைய தினம் பிறந்தநாளைக் கொண்டாடிய

பெயர் : சி.டிலக்ஷனா
முகவரி: மட்டுவில் தெற்கு, மட்டுவில்.

ஐந்தாவது அகவையில்.



பெயர் : சா.சானுஜா
முகவரி : 101, கொழும்புத்துறை வீதி, சுண்டுக்குளி.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:---------------------------------

முகவரி:---------------------------------

பிறந்த ஆண்டு:---------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

---------------------
பெற்றார் ஒப்பம்


# பிரிட்டனில் இருந்து 12000 தமிழர்கள் விரைவில் திருப்பி அனுப்பப்படுவர்

(பிரிட்டன்)

பிரிட்டனில் தஞ்சம் கோரியுள்ள பன்னிரெண்டாயிரம் ஈழத் தமிழர்களை விரைவில் அந்நாடு திருப்பி அனுப்பவுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இலங்கையில் அரசாங்கத்துக்கும் - தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பித்து - இங்கு அமைதிநிலை தோன்றி வருவதையடுத்தே பிரிட்டன் இந்த நடவடிக்கையை எடுக்கத் திட்டமிடப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

பிரிட்டனில் அரசியல் தஞ்சம் கோரி நிராகரிக்கப்பட்டவர்கள் மற்றும் அரசியல் தஞ்சம் கோரி விசாரணைகள் முடிவடையாமல் இருப்போர், முதலில் திருப்பி அனுப்பப்படவுள்ளனர்.

இது தொடர்பாகப் பிரிட்டன் அதிகாரிகள் குழுவொன்று மதிப்பீடுகளை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## தரம்-1 மாணவர்களை வரவேற்க பாடசாலைகளில் கால்கோள் விழா!

2003 ஆம் ஆண்டு தரம் 1 இல் பாடசாலைகளில் புதிதாக இணையும் மாணவர்களை வைபவ ரீதியாக வரவேற்கும் "கால்கோள் விழா" எதிர்வரும் 9 ஆம் திகதி சகல பாடசாலைகளிலும் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் தென்மராட்சி வலயத்திலுள்ள 15 பாடசாலைகளில் இவ்விழா வெகுவிமரிசையாகக் கொண்டாடப்படவுள்ளது. அத்துடன், இவ்வருடம் புதிதாக இணையும் தரம் ஒன்று மாணவர்களுக்குத் தென்மராட்சி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கு யுனிசெப் நிறுவனத்தினால் இலவசமாகப் பாடசாலைப் புத்தகப்பை வழங்கப்படவுள்ளதாகவும் வலயக் கல்விப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (25)

## கல்வயலில் அன்னதானம்

(சரசாலை)

கல்வயல் பெருங்குளம் பிள்ளையார் ஆலயத்தில் எதிர்வரும் 10 ஆம் திகதி தொடக்கம் பிரதி வெளளிக்கிழமை தோறும் அன்னதானம் வழங்கப்படவுள்ளது.

இந்து விவகார அமைச்சின் ஏற்பாட்டுடன் நடைபெறவுள்ள இந்நிகழ்வை, 10ஆம் திகதி அமைச்சர் தி.மகேஸ்வரன் ஆரம்பித்து வைக்கவுள்ளார்.


(34)

## எட்டு கிராமசேவகர் பதவிகளுக்கு வடமராட்சி கிழக்கில் வெற்றிடம்!

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள 18 கிராமசேவகர் பிரிவுகளில் 10 கிராமசேவகர்கள் மாத்திரமே கடமையாற்றுகிறார்கள். இவர்களே மிகுதி எட்டு கிராமசேவகர் பிரிவிலும் பதில கடமையாற்றுவதே நிகழ்வதால், மீளக்குடியமர்ந்த மக்களின் புனர் வாழ்வு புனரமைப்புப் பணிகள் தாமதமடைவதாக கடந்த திங்கட்கிழமை யாழ். செயலகத்தில் நடைபெற்ற மாவட்டத்திலான கூட்டத்தில் எடுத்துக் கூறப்பட்டது.

அதற்குப் பதிலளித்த அரசாங்க அதிபர் 8 கிராம சேவகர்களையும், இளைப்பாறிய கிராமசேவகர் மூலம் ஒப்பந்த அடிப்படையில் தெரிந்து எடுக்கப்பட்டு, 8 கிராம சேவகர் அலுவலர்களையும் தருவதாகத் தெரிவித்துள்ளார். இளைப்பாறிய கிராமசேவக அலவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.



# இலக்கியச் சோலை

## நூல் அகம்



### முதுசொமாக...
(நூல் அறிமுகம்)

ஈழத்துச் சிறுகதை உலகிற்கு புதிய வரவாக வதிரி இ. இராஜேஸ்கண்ணின் 'முதுசொமாக' என்ற தொகுப்பு அண்மையில் வெளிவந்துள்ளது. தூண்டி வெளியீடாக வெளிவந்த இந்த நூலுக்கு- இலங்கையின் பிரபல படைப்பாளிகளான தெணியான், செங்கை ஆழியான், கலாநிதி என்.சண்முகலிங்கன் என்போர் அறிமுகவுரை, நயப்புரை, வாழ்த்துரை வழங்கியுள்ளனர்.

தொகுப்பில் வெளிவந்த பத்துக்கதைகளும் படைப்பாளியின் ஆத்மாவில் கலந்துள்ள மனிதத்தை தரிசிக்க வைக்கின்றன. அவற்றுள் சில வெறும் சம்பவங்களாய் நின்றுபோகாமல், வாழ்வின் அர்த்தத்தை சுட்டுவனவாய், நல்ல வெளிப்பாட்டுடன் கட்டமைக்கப்பட்டுள்ளன. இன்றைய சமகால நெருக்கடி வாழ்வில் மனிதர்கள் எதிர்கொள்கின்ற அவலங்கள், போலித்தனங்கள், பிறழ்வுகள் என்பன கலாபூர்வமாக இக்கதைகளில் படைக்கப்பட்டுள்ளன.

இக்கதைகளினூடாக படைப்பாளியின் சமூகநிலைப்பட்டதனமும், அதன்வழி அவரது சமூகநோக்கும், அவர் மீது வாசகனை அககறை கொள்ளவைக்கின்றது. கதைகளை நகர்த்திச் செல்லும் பாங்கில் பாத்திரங்களின் உரையாடல், இடைவினைகள், அவற்றின் இயல்பான சித்திரிப்பு என்பன படைப்பாளியின் வெளிப்பாட்டுத் திறனுக்கு வலுச்சேர்ப்பனவாக உள்ளன.

இத்தொகுப்பில் வெளிவந்த கதைகளில் எம்மை ஆழமாகப் பாதிப்பவை 'லீவு போம்', 'காவோலைகள்', 'மூன்று தலைமுறைகள்', 'மாரீசம்', 'பித்துமனங்கள்', 'அகதி அந்தஸ்து' என்பவை. இவற்றை அவரது படைப்புக்களின் மாதிரிகளாகப் பார்க்க முடிகிறது.

'லீவு போம்' - என்ற கதையில் படைப்பாளியின் மனித நேசிப்பைக் காணமுடிகிறது. இராணுவச் சிப்பாய்க்குள் இருக்கும் மனிதப் பண்பினை வெளிப்படுத்துகிறது. மனிதம் என்பது சகல பேதங்களையும் கடந்து நிற்பது. அது என்றும் மதிக்கப்படவேண்டியது என்பதை இக்கதை கூறுகிறது.

சொந்த நாட்டினைத் துறந்து, வெளிநாட்டுக்கு வந்து வாழ்வின் அர்த்தத்தை இழந்து தவிக்கும் தமிழ் வாத்தியார் ஒருவரின் மன அவலங்களைக் கூறுவதாக 'மூன்றாம் தலைமுறை' என்ற கதை அமைந்துள்ளது. வெளிநாட்டு மண்ணோடு வாழ்வு ஒட்டிக் கொள்ளாத தன்மையை அழகாக எடுத்துரைக்கின்றது இக்கதை. 'காவோலைகள்' என்ற கதை இன்றைய சமூகத்தில் முதியோரின் கையறுநிலையையும், வயோதிபத்தின் ஆதங்கங்களையும் கூறும் கட்டிறுக்கமான கதையாக வெளிவந்துள்ளது. இக்கதையில்- படைப்பாளியின் பக்குவமும், மனித உணர்வும் கூடிநின்று வாசகனின் உள்ளுணர்வை தொட்டுவிடுகிறது.

தொகுப்பிலுள்ள இன்னொருகதை, 'பித்துமனங்கள்' என்பது. எம்மவரின் இன்றைய வெளிநாட்டு வாழ்வு, கலாசார விழுமியச் சீரழிவுகளை மட்டுமின்றி பெற்றோர் - பிள்ளைகள் என்ற உயிர்ப்பான உறவு முறையையே மலினப்படுத்திவிடும் அவலத்தை அழகாக எடுத்துரைக்கின்றது.

அடுத்து, 'மாரீசம்' என்ற கதையில் 'ஜானகி அக்கா' என்ற வார்ப்பின் ஊடாக மனித இருப்பின் ஆதாரமாய் அமைகின்ற பொருளாதாரக் கட்டுமானம் பலமிழக்கும்போது ஒரு பெண்ணின்வாழ்வு எப்படி அலைக்கழிக்கப்படுகிறது. அந்நிலையில், தற்கொலைகள்கூட இச்சமூகத்தின் போலியான மதிப்பீடுகளின் தவிர்க்க முடியாத மறுபக்கம் என்பதைச் சொல்வதாக உள்ளது. 'அகதி அந்தஸ்து' என்ற கதையில் அவதிப்பட்டு நிற்கும் அகதி வாழ்விலும் சாதிய அடையாளம் மிக அவதானமாகக் கட்டிக் காக்கப்படுவதையும்- அதனால், ஒரு பெண்ணின் திருமணவாழ்வே ஸ்தம்பித்துப்போன நிலைமையையும் காணமுடிகின்றது. அனைத்தையும் இழந்து விட்டுவந்த அந்த ஆதரவற்ற அகதி வாழ்வில்கூட சாதியத்தின் பிடிமானத்தைப் பேணுகையை இழக்கத் தயாராக இல்லை என்ற யாழ்ப்பாண நிலவுடமைச் சமூகத்தின் மன நிலையை எடுத்துக் காட்டுவதாக இக்கதை அமைந்துள்ளது.

வதிரி இ. இராஜேஸ்கண்ணனின் படைப்புக்கள் பத்துக் கொண்ட இத்தொகுப்பில் வெவ்வேறு வகையான பிரச்சினைகள், அவலங்கள், பலதரப்பட்ட மனிதர்கள் மனப்போக்குகள் என அவர் வாழ்க்கையில் காணும் பல கூறுகளைத் தொகுத்து ஒரு நூலாகத் தந்துள்ளார். கதைகளில் வரும் சம்பவங்கள் எமது வாழ்வோடும் மண்ணோடும் ஒட்டியவை, எமக்குப் பரிச்சயமானவை. சமகால வாழ்வின் பரிமாணங்களைக் கூர்மையாகப் பார்த்து நீடித்த கவனந்தரும். அனுபவங்களை வாசகனிடத்தில் தொற்றவைக்க முயன்றுள்ளார். அந்த வகையில் இக்கதைகள் படைப்பாளியின் நேரடி அனுபவத்தின் வெளிப்பாடுகள் தனது சுய அனுபவங்களைப் படைப்பாக்கம் செய்யும் வெளிப்பாட்டுத் திறனின் மதிப்பீடுகளாக எமக்குத் தந்துள்ளார். அத்துடன், மனித வாழ்வின் சாரம்சத்தைக் கண்டடைவதுதான் கலைப்படைப்பு 'என்ற உண்மையையும் உணர்த்தியுள்ளார். சில கதைகளில் நாடகத் தன்மையான கவித்துவத்தன்மை சிறிது தூக்கலாக வந்து சிறுகதையின் இயல்பான தன்மையைப் பாதித்து விடுகின்றமையயைச் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது. மொத்தத்தில் இத்தொகுப்பிலுள்ள கதைகள் வதிரி. இ. இராஜேஸ்கண்ணனிடமிருந்து கிடைக்கப்போகும் நல்ல படைப்புக்களுக்குக் கட்டியம்கூறும் வகை மாதிரிகளுக்கான முதல் வரைபுகள் எனக் கூறலாம்.

- மு.அநாதரட்சகன்.

## A-9 என நீளும் நினைவுகள்

பகுதி பதின்மூன்று

மாங்குளத்தில் A-9 இன் மருங்கினில்
மலையென நிமிர்ந்திட்டதோர் மின்சாரக்
கோபுரம்! இஃதே ... யாழ்ப்பாண ராவுக்கு
ஒளிகொடுத்திடும் 'மின்சாரத் தூதுவன்'.
'நூற்றி முப்பத்துரெண்டு K.V ரவர்'...,
நுழைந்த சண்டை அறுத்து எறிந்ததால்
நூர்ந்து போனது ; யாழ்மண் ..இரவினில்
நொடிந்து குருடராய்த் தடுமாறி வீழ்ந்தது.

மாங்குளத்தினை அடுத்து A-9 னிலே
வளர்ந்த புற்றாய்க் கிளிநொச்சிப் போர்த்தளம்
தேங்கிக் கிடந்தது ; தெருவை அடைத்தது.
திசைகள் அஞ்ச ... வெடிகள் விதைத்து.
ஆங்கு ஆங்கு சில சில சண்டைகள்
அயலில் நித்தம் நிகழ ..நகரிலே
ஓங்கி வளர்ந்த அழகு உலர்ந்தது.
உறவு எட்டி அகதியாய்ப் போயிற்று.



கிளி நகர்த் தளம் .. முற்றுகைப் போரினால்
கீறல் பட்டுக் குருதி வடிகையில்
வலிய 'ஆனை இறவு'.. அமைதியாய்
'மறைபொருளுடன்' நோட்டங்கள் விட்டது.
பளைக்கு அங்காலும் பரந்தனுக் கிங்காலும்
படுகுழியான A-9 வீதியில்
கழுகுக் கண்ணுடன் கனகரக மோட்டார்கள்
கணைகள் கக்கிடக் காத்துக் கிடந்தன.

ஜெயங்கொண்டான்

## கருணையை வேண்டி...

எருது பூட்டப்பட்ட அந்த வண்டியை
கடக்கிறோம் நாமிருவரும்.
முள் அடர்ந்த தடியினால் தன்மீது வீழுகின்ற
ஒவ்வோர் அடியோடும்
எலும்புகள் துருத்தித்தெரிய
இழுவுண்ட மேற்றோல் துடிக்க
அது நகர்வதற்கே
பெரிதும் முனைகிறது...
முகத்தில் எதுவித உணர்வுமில்லை..
கண்கள் மட்டும்
கருணை கேட்டு இறைஞ்சுகின்றன...
நுரை தள்ளுகிறது வாயில்!
தனது நகர்வுத் தூரத்தை
அதிகரிக்க மேற்கொள்ளும்
கடும் பிரயத்தனம்
தோற்றுப்போக
கீழே வீழுகிறது அது...
எனது சின்ன மகள் வினவுகிறாள்
"தனது வாழ்வுக்கு ஒரு அர்த்தம் இருக்குமென
இது கருதுமா அம்மா,"
மனமறிந்து ஒரு பொய்யினை
பதிலென்று தருகிறேன்.
சாவதைக் காட்டிலும்
வாழ்தல்
எப்போதும் அர்த்தம் உடையதுதான் மகளே...
அவள் என்னையே முறைக்கிறாள்.
"இந்தச் சமூகத்தில்
ஒரு புரட்சி வெடிக்குமெனில்
என்னையே நான் அதில்
அழித்துக் கொள்வேன்!
மனிதர் இழைக்கும் இந்தக்
கொடூரங்களைத்
தாங்குவதைக் காட்டிலும்.!"
அவள் சொல்கிறாள்.
அந்தத் தெருவின்
கல் அடர்ந்த கரையோரம்
அது வீழ்ந்து கிடக்கிறது!
அடுத்தடுத்து அதன் மீது
பதிந்த அடிகளால் கூட
அதனை எழவைக்க
முடியவில்லை!
"கடவுளின் கண்களில்
கருணை உள்ளதாம்...
என் மகளுக் கென்னவோ
வயது பதின்மூன்றே தானாகிறது!!"



ஆங்கிலமூலம் - 'Plead Mercy'
by - Anne Ranasinha
தமிழில் - ந.சத்தியபாலன்

# தீர்க்கப்படாத சமன்பாடுகள்

**தாட்சாயணி**

நேற்று நடந்ததை நினைக்க எனக்குக் கோபம் கோபமாக வருகிறது பாருங்கள். நானொன்றும் பொல்லாதவன் அல்ல, நானும் இவர்களின் பருவத்தைத் தாண்டி வந்தவன்தான். அதனால்தானே ஒரு ஆசிரியன் இப்படிப்பட்ட ஒரு குணாதிசயமுள்ளவனாய் இருக்க வேண்டுமென்று நானே எனக்கொரு வரைமுறை அமைத்து வந்துள்ளேன். இந்தச் சிறுசுகள் என்னை எப்படி ஏய்த்துவிட்டன. நான் நேற்று வரும்போது எவ்வளவு கனவுகளுடன் வந்தேன். பின் தங்கிப்போயிருக்கிற இந்தக்கிராமத்தை எவ்வளவு நேர்த்தியாய் நான் மாற்றப்போகின்றேன் என்றும் என்னுடைய துளி. நேரத்தையும் வீணாக்காமல் நாவறண்டு தாகமுற்றாலும், என்னுடைய சுகத்தைப்பாராமல் அவர்களை அன்போடு அணுகிப் பாடம் கற்றுத்தருவேன் என்றும் எவ்வளவு நப்பாசையோடு வந்தேன். அத்தனையும் மண்ணோடு மண்ணானதுபோல்த் தானேயிருக்கின்றது.

இவர்கள் வயதில் நானும் இருந்திருக்கின்றேன். இவர்களின் குறும்பை நானும் அந்நாளில் கரும்பு கடிப்பதுபோன்று இனிமையுடன் செய்திருக்கின்றேன். அந்த நேரங்களில் எனக்கு ஆசிரியர்களிடமிருந்து கிடைத்த அனுபவத்தை கொண்டே ஆசிரியருக்குரிய பண்புகளை எனக்குள் உருவாக்கிக் கொண்டவன் நான்.

**சிறுகதை**

முக்கியமாக என்னுள் ஒரு மாற்றத்தை விளைவித்தவர் சாம்பசிவம மாஸ்டர். அவரை இப்போது நினைத்தாலும் முதுகுத்தண்டு சில்லிட்டுப் போகிறது.

சாம்பசிவம் மாஸ்டரிடம் படித்தவர்களுக்கு, அவரின் அடி அவ்வளவு லேசில் மறந்துபோகாது. அவர் தடியை விளாசி விளாசி பற்களை நெறுமியபடி, வீச வீச அடிவாங்கி வாங்கிக் கையைப் பின்னுக்கிழுக்கும் மாணவர்கள், அதைப்பார்க்கும் மற்ற மாணவர்களுக்குச் சிரிப்பு வந்தாலும் அடுத்தது தாங்கள்தானோ என்னும் பயத்தில் இருப்பார்கள்.

சாம்பசிவம் மாஸ்ரரின் அந்த வெள்ளை நஷனல் சட்டையையும் அவரது பிரம்பையும் கண்டுவிட்டால், எல்லோருக்கும் கிலி பிடித்து விடுவதென்னவோ உண்மை. ஆனால், அவர் தோற்றம் விசித்திரமானது- கறுப்பென்றால் அவ்வளவு கறுப்பு. கரிக்கறுப்போ, காகக் கறுப்போ என்று பேதப்படுத்தக்கூடியதல்ல அவர் நிறம். மனிதர்கள் யாவருக்குமே அமையக்கூடாத கறுப்பு அவருக்குரியது. அவருடைய கறுப்பில் நீக்கிரோக்கள் கூடத் தோற்றுப்போய்விடுவார்கள். ஆனால், அவர் நீக்ரோகூட இல்லை, சராசரி யாழ்ப்பாணத்து மனிதர். நீக்ரோக்களுக்கு சுருள் சுருளாக மயிர் இருக்குமே, இவருக்கு அப்படி இல்லை. அப்படி இல்லை என்றால், நல்ல கம்பி மயிராக்கும் என்று யாரும் நினைத்துவிடக் கூடாது. அவருக்கு மயிர்கூட இல்லை அவ்வளவுதான். காதோரங்களிலும் பின்பிடரியிலுமாய் ஒரு சில மயிர்க்கற்றைகள்- என்றோ ஒரு காலத்தில் அவருக்கு மயிர் இருந்தது என்றோ நிரூபிப்பதாய் இருந்தன. மற்றபடி மண்டை முழுவதும் வழுக்கைதான். ஆனால், பற்கள் மட்டும் ஒன்று கூடக் கொட்டவில்லை. அதில் மட்டும் ஆண்டவன் வஞ்சம் வைக்காமல் முத்துப்போன்ற வெண்மையின் பளீரிடலைக் கொடுத்திருந்திருந்தான். அந்தத் தோற்றத்தை வைத்தே நானும் என் நண்பர்களும் கோபம் புகைக்கும் வேளைகளில், அவரை நக்கலடித்து நமக்குள் திருப்திப் பட்டதுண்டு.

'அமாவாசை இருட்டிலை மனிசன் நிண்டாரெண்டால் பேய் பிசாசென்று நினைச்சு சனமெல்லாம் ஓடிடும்.”

அந்த அளவிற்கு அவருடைய வேட்டி, நஷனல் சட்டை. பிரபல்யமாயிருந்தது. ஆனால் ஒன்று- அந்தத் தூய்மையான வெள்ளையிலே அவர் பாடசாலைக்கு வருவதற்காகவும், அவரது அபார கணித ஆற்றலுக்காகவும் அவரைப் போற்றித்தானாகவேண்டும்.

அவரது மூளைக்குள் தினம் தினம் பற்றியெரியும் கணிதச்சிக்கல்களின் வெம்மை தாளாமல்த்தான், அவர் தலைமயிர் உதிர்ந்து போயிற்றோவென்று நான் சில சமயங்களில் யோசிப்பதுண்டு. அவர் மூக்குப்பொடி உறுஞ்சும் சத்தம்மட்டும் நிரம்ப வித்தியாசமானது. பூனை சீறுமே! அப்படியொரு சத்தத்தில் இடையிடையே மூக்கில் பொடி போட்டுச் சுவறிக்கொள்வார். அந்தக்கணத்துக்கே காத்துக் கிடந்ததுபோல வகுப்பின் மூலைக் குள்ளிருந்து கொல்லென்று சிரிப்புக்கிளம்பும். சிலவாய்கள் அடக்கமாட்டாமல் கைகளால் பொத்தப்படும். அல்லது நிலத்தில் விழுந்ததை எடுக்கும் சாட்டில் கீழே குனிந்து கொள்ளும். அதற்கிடையில் அவர் முகத்தில் அனல் மூண்டிருக்கும். கண்கள் மட்டுமே சிவக்கும் வரத்தைப் பெற்றிருப்பதால் கண்கள் சிவக்கக் கர்ச்சிப்பார்.

“ஆரடா கழுதை சிரிச்சது”

எந்தக் கழுதையும் பதில் சொல்லாமல் அடக்க ஒடுக்கமாய் அமர்ந்திருப்பான்.

“எழும்படா சிரிச்ச கழுதை”

எழும்புவதற்கு எந்தக் கழுதையும் தயாராய் இருப்பதில்லை. கடைசியில் குறிவைத்து ஒரு திசையைப் பார்த்து எல்லோரையும் எழுப்புவார்.

“வாங்கோடா......இஞ்சாலை.....”

“வாங்கோ....டா.. இல்லையோ..”

எனக்குள் ஒரு குறுகுறுப்பு எழும்பிக் கேட்டுவிடுவேன்.

“சிரிச்சதுமில்லாமக் கேக்குறியோடா கேள்வி..”

அந்த மூக்குப்பொடி வாசனையை நன்றாக முகர்ந்து கொண்டு அவரை விரோதப் பார்வை பார்ப்பேன்.

“என்னடா பார்வை பார்க்கின்றாய்.., பெரிய சிவாஜி என்ற நினைப்பு..”அதற்குப்பிறகு மாணவிகள் என்னை சிவாஜி என்றே ரகசியமாய்க் குறிப்பிட்டுக் கதைத்ததாய்ப் பிறகுதானறிந்தேன்.


இப்படி அவரவரின் தோற்றத்தை வைத்தே ஒருவரின் தோற்றத்தைக் கேலி செய்யலாமோ என்று நீங்கள் முணுமுணுப்பது கேட்கிறது. நியாயந்தான். அது அவரவரின் செயல்களைப் பொறுத்தும் அமையலாமல்லவா?

நான் ஒன்றும் மன்மதன் அல்லன். என்னையும் இவர்கள் கேலி செய்வதை நான் அனுமதித்திருப்பேன். அவர்கள் பராயம் அப்படி. ஆனால், என் தோற்றம் அவர்களைக் கேலி செய்ய அனுமதித்திருந்ததில்லைப்போலும். அப்படியென்றால் கறுப்பான சுருண்ட கேசமும், வெண்ணெய்போல் கொழுகொழுவென்ற அழகான முகமும் எனக்கு இல்லைத்தான். ஆனாலும், சராசரிக்குக் கொஞ்சமும் குறையாத நேர்த்தியான ஒரு மனிதரூபம் என்னிடமும் உண்டு. உருவத்தில் மட்டுமன்றி உள்ளத்திலும்தான் என்று சொல்லிக் கொள்வதை நான் தற்பெருமையாக நினைக்கவில்லை.

எங்கேயோ தொடங்கி எங்கேயோ போகிறேன் போலிருக்கிறது. நான் சொல்ல வந்த விஷயம் இதுதான். சாம்பசிவம் மாஸ்டர் போன்ற ஆசிரியர்களின் அடிக்குப் பயந்து படித்ததனால்தான், நான் இத்தனை தூரம் முன்னுக்குவர முடிந்தது. என்றாலும், அந்தப் பிஞ்சுமனதில் அன்று படிந்த வேதனை இன்னும் ஆறாமல் இருப்பதால், நானே கொஞ்சம் கொள்கைகள் வகுத்து, ஒரு ஆசிரியன் இப்படித்தானிருந்து, பிஞ்சுமனங்களை வசீகரித்து வசப்படுத்திக் கொள்ள வேண்டுமென்று ஒரு கோப்பை உருவாக்கினேன்.

அதன்படிதான் நேற்று ...ம்... அதொன்றும் பெரிய விஷயமில்லை. முதலில் எல்லாமே சாதாரணமாய்த்தானிருந்தன. அதிபர் அன்பான புன்முறுவலுடன் வரவேற்ற பின்னர் அலுவலகத்திலிருந்தே கையைக் காட்டினார்.

“அங்கையிருக்கு ஸ்ராவ் ரூம்...



நீங்கள் போகலாம்...”

நேற்று எனக்குப் புதிய ரைம் ரேபிள் தரப்படவில்லை. எழுந்தமானமாக ஆசிரியர் இல்லாத வகுப்புக்கள் எனக்குத் தரப்பட்டன. முதல் இரண்டு, மூன்று வகுப்பில் எந்தப் பிரச்சினையும் ஏற்படவில்லை. நான்காவது பாடம். எப்படித்தான் அந்த விபரங்கள் அந்த வகுப்பு மாணவர்களைத் தொற்றிக் கொண்டனவோ தெரியாது. நான் ஒருபோதும் அடிக்கமாட்டேன் என்பதும், ஒரு நண்பனாய்ப் பழகி இதமாய்க் கற்றுத்தருவேன் என்பதும் யுத்தகாலச் செய்திபோல ஒவ்வொருவரால் காவிச் செல்லப் பட்டு, அந்த வகுப்புக்கும் சேதி வந்துவிட்டது.

“சேர், நீங்கள் அடிக்கமாட்டீங்களாம், அப்பிடியோ சேர்...”

“சேர் நீங்கள் ட்ரெயினிங் ரீச்சரோ...”

முன் வாங்கிலிருந்து இரண்டொரு குரல்கள் கிளம்பி கேள்வியோடு என்னை நோக்கின. ஆதரவாய் அவர்களைப் பார்த்துப் புன்னகைத்தேன். கடைசி வாங்கிலிருந்த பையன்கள் இதொன்றையும் கவனிக்காமல் தங்கள் பேச்சும், குழப்படியுமாய் சுவாரஸ்யமாய் இரைந்து கொண்டிருந்தார்கள்.

கடைசி வாங்கென்பது எப்போதும் ஒரு விசேஷத்துக்குரியது. அந்த வாங்கிற்கு எப்போதும் ஒரு போட்டியுண்டு. அதில் இருக்கும் குழுவினர் கெட்டிக்காரர்களாகவோ அல்லது முழுமக்குகளாகவோ இருப்பதுதான் வழக்கம். நடுத்தர வர்க்கத்தினரைக் கடைசி வாங்குகள் இலகுவில் ஏற்பதில்லை. அந்தக் குழுவில் ஒரு கெட்டிக்காரன் இருந்துவிட்டால் அந்த வாங்கே கெட்டித்தனமாய் மிளிரும். அவன் மக்காக இருந்தாலோ கேட்கவே வேண்டாம்.

இப்போது அந்த வாங்கிற்குரியவர்கள் கெட்டிக்காரர்களாகவோ, ஒழுங்காகப் படிப்பவர்களாகவோ எனக்குத் தோன்றவில்லை. ஆனால, சிலவேளை இப்படியும் இருக்கலாம். பெரும்பாலான கெட்டிக்காரப் பையன்கள் குழப்படிக் காரர்களாகவே இருக்கின்றார்கள். எனவே இரண்டு நாள் போகின்ற வரை இவர்களைப் பற்றி எதுவுமே சொல்லமுடியாது.

“சத்தம் போட வேண்டாம்...” பின் வாங்கை நோக்கி குரலை எச்சரிக்கையாக்கி அனுப்பி வைத்தேன். “அவங்கள் சரியான காவாலிகள்...” முன் வாங்கிலிருந்த ஒரு மாணவி எனக்கும் கேட்கும்படி தனக்குள் முணுமுணுத்தாள்.

அவர்கள் சட்டென்று திரும்பி என்னைக் கவனிப்பதுபோல் 'போக்குக்' காட்டிவிட்டு, நான் கரும்பலகைக்குத் திரும்பியதும் திரும்பவும் தங்கள் பாட்டில் கதைத்துக் கூச்சலிடத் தொடங்கிவிட்டார்கள்.

“சேர்... இஞ்ச...” ஒருவன் இன்னொருவனிடமிருந்து பறித்த பொக்கற் கலண்டரைத் தூக்கி உயர்த்தினான்.

“பாபா...” இன்னொருவன் இரண்டு விரல்களைத் தூக்கிக் காட்டிக் கத்தினான்.

நான் புருவங்கள் நெரியப் புன்னகைத்தேன்.

“இதெல்லாம் படிக்கிற நேரம் வைச்சிருக்கக்கூடாது. சரியோ, மூடிவையும்...”

மிருதுவாக ஆனால், கண்டிப்போடு சொன்னேன். ஆனால் அந்த இரைச்சல் அடங்கவில்லை.

நான் இறுக்கமாகக் கண்டிக்காத துணிச்சலோ என்னவோ, ஒவ்வொருவரும் வண்ண வண்ணங்களாய்க் கலண்டர் பரிமாறிக் கூச்சலிடத் தொடங்கினார்கள். அந்த நிமிஷம்தான் முதன்முதலாக எனக்குக் கோபம் வந்தது. அவ்வளவோடு நின்றிருக்கலாம் ஆனால், என் போதாத வேளையோ, அந்த மாணவர்களின் போதாத வேளையோ- அதிபர் வந்துவிட்டார். இந்தக் கூச்சலும், இரைச்சலும் அவருக்குப் பிடிக்காமல் போய் விட்டன.

“எக்ஸ்கியூஸ் மீ... சேர்...” ஒரு நிமிடம் நின்று நிதானித்து என்னிடம் கூறிவிட்டுக் கடைசி வாங்கிலிருந்த ஒருவனைச் சுட்டி, ஆள் காட்டி விரலை நீட்டினார்.

“வாடா இஞ்சாலை...”

அவன் பயந்து பயந்து வெளியே வந்தான். அவன் வந்ததுதான் தாமதம். கையிலிருந்த பிரம்பினால் மாறி, மாறிச் சளார், சளார் என்று அடித்தார் அதிபர்.

“வகுப்பிலை சேர் நிக்கிறது தெரியேல்லையோ. சேருக்கு மரியாதை குடுக்குறேல்லையோ...”

அவர் சொல்லிச் சொல்லி அடித்தார். எனக்குள் ஏதோ இறுகிக் கொண்டிருந்தது. அவமானத்தாற் குன்றிவிட்டேன். என்னுடைய பாடம் நடந்து கொண்டிருக்கும்போது, என் மாணவனின் குற்றத்துக்கு அதிபரே தண்டனை அளிப்பது நான் விரும்பத்தக்க விஷயமொன்றல்ல. எனக்கு மிகவும் அவமானகரமாகப்பட்டது.

“சேர், குழப்படி செய்தால் நல்லப் பனிஷ்மெண்ட் குடுங்கோ.” அதிபர் போய்விட்டார். அவன் நடுங்கிக் கொண்டு வந்தான்.

“மன்னிச்சுக் கொள்ளுங்கோ சேர்...” மிகவும் பவ்யமாகப் பணிந்தபடி கேட்டான்.

“சரி போய் இரும்...”

இறுக்கமாய்ப் பதில் சொன்னேன். அதன் விளைவுதான் என் இன்றைய கோபம். ஓ... நான் என் இலட்சியத்தில் எவ்வளவு பரிதாபமாக அவமானகரமாகத் தோற்றுவிட்டேன்.

இன்று எனக்கு நிரந்தரமாக ரைம் ரேபிள் தந்துவிட்டார்கள். என்னுடைய கொள்கையில் சின்னச் சின்ன மாற்றங்கள் செய்துவிட்டேன். நேற்றுப்போன எல்லா வகுப்பையும் மறந்துவிட வேண்டுமென்றும், இனிப் புதிய வகுப்புக்களில் இறுக்கமான, கண்டிப்பான ஆசிரியராயும் இருக்க வேண்டுமென்றும் முடிவுசெய்து கொள்கிறேன்.

முகத்தில் சுள்ளென்று கடுமை அடிக்கிறது. கூச்சலும், குழப்பமுமாய் வகுப்பறை, சந்தை இரைச்சலில் மூழ்கிக்கிடக்கிறது.

“புது சேரடா எங்களுக்கு...”

மூலைக்குள் கதைத்துக் கொண்டிருந்தவர்களை மிரட்டுகிறேன்.

“என்ன சேர், வந்தவுடனையே பிரம்பு எடுக்கிறீர்கள்...”

என்னுள் கொதிப்பு ஏறியது. 'ஷட் அப்' வகுப்பறை அமைதியானது. ஊசி விழுந்தாலும் கேட்கக்கூடிய அமைதி. நான் ஒரு திருப்தியோடு புத்தகத்தை வாங்கிப் படிப்பிக்கும் பாடத்தின் தலைப்பை கரும்பலகையில் எழுதுகிறேன். சமன்பாடுகளின் தீர்வுகள். அதைப் பற்றி இரண்டொரு விளக்கங்கள் கொடுத்துவிட்டு சமன்பாடுகளை எழுதுகிறேன். எழுதிவிட்டுத் திரும்பிய என்பார்வை எதேச்சையாக அவன் மீது செல்கிறது. என் பார்வையைக் கவனித்த அவன் பக்கத்திலிருந்தவன் கண்களில் குறும்பு பளபளத்தது.

“சேர், வகுப்பு நேரம் தொப்பி போட்டிருக்கிறார். ஏனெண்டு கேளுங்கோ சேர்...”

என்னுள் படபடவென்று வெயில் கொளுத்தியது.

“எழும்படா...”

அவன் தடுமாறித் தடுமாறி எழுந்தான்.

“சேர்... சேர்... நான்...”

“பாடநேரம் தொப்பி போடக் கூடாதெண்டு தெரியாதே...” உறுக்கினேன்.

“நான் எல்லாப் பாடத்துக்கும் போடுறனான் சேர்...”

“எந்தப்பாடத்துக்குப் போட்டாலும் என்ரை பாடத்துக்குப் போடக் கூடாது...கழட்டும், கழட்டும்...”

அவன் ஏதோ சொல்ல முடியாமல் தவிப்பது தெரிந்தபோதும் என் ஆத்திரம் கண்களை மறைத்தது.

“கழட்டெண்டால் கேக்கேல்லையோ...”

நான் பிரம்பால் தட்டித் தொப்பியை விழுத்தினேன்.

“ஐயோ நான் மகாபாவியாகி விட்டேனா...?”

குழந்தைத்தனம் மாறாத அந்தப் பையனின் பிஞ்சுத்தலை தலைமயிர்கள் ஏதுமற்று மொட்டையாய்ப் பளபளத்தது. ☆

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

ஊறுஒரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின்
ஆறு என்பர் ஆய்ந்தவர் கோன்.

- திருக்குறள்.

# நமது நோக்கு

## வரையறுத்தே வாழ்பவர்கள்!

யாழ்.குடாநாட்டைக் கடந்த சில வாரங்களாக அச்சுறுத்தியும், பீதியிலுமாழ்த்தி வரும் இனந்தெரியாத வைரஸ் காய்ச்சலினைக் கட்டுப்படுத்துவதற்கும் - இது தொடர்பான போர்க்கால நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குமாக அரசாங்க அதிபர் தலைமையில் மாவட்ட மட்டத்திலும், பிரதேச செயலர் பிரிவுகளிலும் செயலணிக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரையில் - அரசாங்க நிர்வாகத்தின் இந்தச் செயற்பாடு காலதாமதமான நடவடிக்கையானாலும் கூட - இந்த வகையிலாவது விழிப்புணர்வுடன் செயலாற்ற முன்வந்திருப்பது ஓரளவு பாராட்டத்தக்கதே.

ஏனெனில் - இனந்தெரியாத வைரஸ் காய்ச்சல் பரவ ஆரம்பித்ததன் பின்னரே - யாழ்ப்பாணத்தில் இயங்கும் அரசாங்க அமைப்புக்களின் 'செயற்பாட்டுத்திறன்' பற்றி மக்கள் தெளிவாக அறியும்படியான நேரடி அனுபவங்கள் மக்களுக்குக் கிடைத்தன.

இந்த அனுபவங்களின் அடிப்படையில் - வைரஸ் காய்ச்சலைக் கட்டுப்படுத்துவதற்கு போர்க்கால நடவடிக்கைகள் தற்போதாவது அறிவிக்கப்பட்டிருப்பதை வரவேற்க வேண்டியவர்களாகவே மக்கள் உள்ளனர். எப்போதுமே - அத்தியாவசியமாக, உடனடியாகச் செயற்பட வேண்டிய நிலையில் இருக்கவேண்டிய சுகாதார, மருத்துவப் பிரிவினர் -'வருமுன் காப்போம்' என்பதைவிட, 'வந்தபின் பார்ப்போம்' என அசமந்தப் போக்கில் இருந்ததையே கடந்த நிகழ்வுகளில் மக்கள் கண்டிருந்தனர்.

ஒருபுறம் மக்கள் தொடர்ச்சியாகப் பலியாகிக் கொண்டிருக்க, தினமொன்றுக்கு பெருந்தொகையான நோயாளர்கள் வைத்தியசாலைக்குப் படையெடுத்து வர - சம்பந்தப்பட்டவர்கள் ஆளையாள் மாறிமாறி குற்றஞ்சாட்டி அறிக்கைப்போர் நடத்திக் கொண்டிருந்த பரிதாபநிலையை யாழ்ப்பாணம் கண்டிருக்கிறது.

இந்த வகையில் - பெருமளவில் அழிவுகளையோ அல்லது எதிர்பாராத பாதிப்புக்களையோ- எதிர்கொண்டு சமாளிக்கக்கூடிய நிலையில் யாழ்ப்பாணம் இல்லாதிருந்ததும் வெட்ட வெளிச்சமானது.

தமது அன்றாட, கிரமத்திற்குட்பட்ட பணிகளுக்கு மட்டுமே தம்மை வரையறுத்துக் கொள்கின்ற - 'அரசாங்க ஊழிய' மனோபாவமும்,

தமக்கான வேலைப் பட்டியலை வைத்துக் கொண்டு - அதற்கு அப்பால் சிறிது நகரவும், சிந்திக்கவும் தலைப்படாதவர்களாக தம்மை உள்ளடக்கிக் கொள்வதையும்,

தமக்கான பணிகளைத் தெட்டத்தெளிவாக, அழுத்தந் திருத்தமாக வரையறுத்துக் கொண்டு - எல்லைகளிட்டு, அதற்கப்பால் என்ன நடந்தாலும் - அது சமூகத்தைப் பாரியளவில் பாதித்தாலும்கூட - அது அடுத்த வீட்டுக்காரன் கடமை என தப்பித்துக் கொள்ளும் உணர்வும் - எமது அதிகாரிகளிடையே ஊறிப் போயிருப்பதை மக்கள் நன்றாகவே அறிந்து வைத்திருக்கின்றனர் என்பதை சம்பந்தப்பட்டவர்கள் உணர வேண்டும்.

அரசாங்க ஊழியர்கள் - அவர்கள், சுகாதாரப் பிரிவினரோ மருத்துவத் துறையினரோ - மக்களுக்குச் சேவையாற்றவே பணிக்கமர்த்தப்பட்டிருக்கின்றனர் என்பதையும், அவர்களிடம் முழுமையான, திருப்தியான சேவையை எதிர்பார்ப்பது மக்களின் உரிமை என்பதையும் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இந்த வகையில் - இனந்தெரியாத வைரஸ் காய்ச்சல் கற்றுத்தந்த அனுபவங்களினூடாக தமது முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும், செயற்பாடுகளையும் - இவர்கள் மீளாய்வு செய்து - மக்களுக்கான அர்ப்பணிப்புணர்வுடனான சேவைக்குத் தம்மைத் தயாராக்கிக் கொள்ள வேண்டுமென்றே மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

இந்த வகையில் - யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்து அரசாங்க அதிகாரிகளினதும் - முழுமையான பணிகளை உத்தரவாதப்படுத்த வேண்டிய, உடன் மீளாய்வுக்குட்படுத்த வேண்டிய அவசியத்தை - அரச நிர்வாகத் தலைமையிடம் யாழ்.மக்கள் முன்வைக்கின்றனர்.

# சுமுக நிலை தோன்றினால் மட்டுமே அடுத்த கட்டங்களுக்கு நகர முடியும்


## தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன்

*இடம்பெயர்ந்த மக்கள் - உயர்பாதுகாப்பு வலயத்திலுள்ள தமது சொந்த வீடுகளுக்குத் திரும்புவதும் - இராணுவத்தின் நிபந்தனைகளும் எவ்விதத்திலும் தொடர்பற்றவை. இராணுவம் - மக்களது சுமுக வாழ்க்கைக்கு விதிக்கும் கெடுபிடிகள் யதார்த்தமற்றவை எனத் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.*

*கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில ஊடகமொன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.*

*அப்பேட்டியிலிருந்து சில பகுதிகள் -*

### பத்து மாத யுத்தநிறுத்தமும் நான்கு மாத அமைதிப் பேச்சுக்களும்



அமைதி முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டபோதும் இயல்பு வாழ்க்கை இன்னமும் ஏற்படுத்தப்படவில்லை. மக்களுக்கு அமைதியின் விளைவுகள் இன்னமும் கிடைக்கவில்லை. முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும், அவை நடைமுறைப் படுத்தப்படுவது என்னும் போது மக்களிடம் சுமுக நிலை உருவாகவில்லை என்றே கூறலாம்.

இதுவரை மூன்று சுற்றுப்பேச்சுக்கள் முடிவடைந்திருக்கின்றன. உறுதிப்பாடுகள் பலவும் வழங்கப்பட்டன. நாமும் சில புரிந்துணர்வுகளை ஏற்படுத்திக் கொண்டோம். ஆனால், இந்த உறுதிப்பாடுகள் யாவும் செயற்படுத்தப்படவேண்டுமென்றே மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

சமாதான முயற்சிகள் பற்றியும் அபிவிருத்தி தொடர்பாகவும்- அவர்கள் அறிந்து மட்டுமே வைத்திருப்பதால, அவை உறுதியளித்தபடி செயற்படுத்தப்படாதவிடத்து விரக் தியும் நம்பிக்கை இழப்புமே மக்களிடம் உருவாகின்றது.

### உயர்பாதுகாப்பு வலயங்கள்

உயர்பாதுகாப்பு வலயங்களைப் பொறுத்தவரையில் மக்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்து வந்த பூமி இது. இது மக்களது பிரச்சினை. இதனை இரண்டு தரப்புமே இராணுவ நோக்கில் பாராது, மனிதாபிமான அடிப்படையில் பார்க்க வேண்டும். இது மக்களின் நாளாந்த வாழ்க்கை தொடர்பானது.

உயர்பாதுகாப்பு வலயங்கள் சிலவற்றிலிருந்து மக்கள் விரட்டப்பட்டு 20 வருடங்களாகின்றன. குறிப்பிட்ட சில பகுதிகளில் கால்நூற்றாண்டு காலமாகவே மக்கள் அங்கிருந்து விரட்டப்பட்டிருக்கின்றனர்.

எனவே, இம்மக்களின் மீளக் குடியமரும் உரிமை இனியும் மறுக்கப்பட்டால் அது தீவிரமான மனிதாபிமானப் பிரச்சினையாகவே கருதப்படும். இராணுவத்தின் பேரம் பேசும் நிலையிலிருந்து- இது முற்றிலும் மாறுபட்ட பார்வையில் இந்தச் சிக்கல் நோக்கப்பட வேண்டும்.

### போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் நிலைப்பாடு

படைச்சமநிலை எனக்கூறப்படும்போது- அது ஆயுதங்களையும் ஆயுதம் தாங்கியோரையும் கருதமுடியும். தற்போதைய சமாதான முயற்சிகள் நிரந்தர சமாதானத்தை நோக்கியே முன் நகர்த்தப்படுகின்றன.

இந்தநிலையில் யாழ்ப்பாணக் குடா நாட்டிலிருந்து இராணுவத்தை வெளியேறுமாறு யாரும் கேட்கவில்லை. இதே போலவே ஆயுதக்களைவு பற்றி எவரும் கேட்பதுமாகும்.

உயர்பாதுகாப்பு வலயங்கள் எனக் கூறப்படும் பிரதேசங்களில் உள்ள இராணுவத்தின் பிரசன்னம் மக்கள் தமது சொந்த வீடுகளுக்குத் திரும்புவதைத் தடுக்கின்றது. அமைதி முயற்சிகள் முன்னெடுக்கப்படும்போது, தமது சொந்த வீட்டிற்கு திரும்பிச் செல்வதற்கு இடம் பெயர்ந்தவர்களுக்கு இருக்கும் உரிமை பற்றி ஐ.நா. சாசனமே குறிப்பிடுகின்றது.

இது ஒரு அடிப்படைத் தேவை. தமது சொந்த இடங்களுக்குத் திரும்பும் வாய்ப்பு அல்லது உரிமை வேண்டுமென்றே மக்கள் கேட்கின்றனர். இந்த நிலையில் படைச்சமநிலையைக் காப்பது என்ற பெயரில் எந்தவொரு தரப்பும் தன்பாட்டுக்குத் தீர்மானம் எடுத்து வைத்திருப்பதோ அல்லது அளவீடுகளை மேற்கொள்வதோ நியாயமாகாது.

எனவே, படைச்சமநிலையைத் தக்கவைப்பது அல்லது படை வலுவைப் பாதுகாப்பது என்பது பொதுமக்களுடன் எவ்வகையிலுமே தொடர்பற்றவையாகும். இரண்டு தரப்புமே இதில் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும்.

### நியாயமற்ற, பொருத்தமற்ற இராணுவத்தின் நிபந்தனைகள்

நிபந்தனைகள், புரிந்துணர்வு அல்லது இணக்கப்பாடு என்பன இருவேறுபட்ட விடயங்கள். கடந்த பத்து, பதினொரு மாத காலத்தில் முழுமையான செயற்பாடுகளும் புரிந்துணர்வின் அடிப்படையிலேயே உருவாகின.

போர்நிறுத்த ஒப்பந்தமே புரிந்துணர்வு உடன்படிக்கை என்றுதான் அழைக்கப்படுகிறது. இவ்வாறான புரிந்துணர்வின் மூலமே முன்னேற்றங்களை நாம் எட்டமுடியும். ஆனால், இராணுவம் தெரிவிப்பது நிபந்தனைகளாக வெளிப்படுத்தப்படுகின்றன. இவை யதார்த்தமற்ற, நியாயமற்ற நிபந்தனைகள் ஆகும்.

விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கையளிக்க வேண்மெனக் கோருவது தமிழ் மக்களை பாதுகாப்பற்ற நிலைக்குத் தள்ளிவிடுதேயாகும். தமிழ்த் தேசத்தின் பாதுகாப்பே, விடுதலைப் புலிகளின் இராணுவ வலுவில்தான் தங்கியுள்ளது. இதனால் ஏற்றுக் கொள்ளத்தக்க தீர்வு காணப்படும் வரையில் நாம் எச்சூழ்நிலையிலும் இது தொடர்பாக எந்த இணக்கத்திற்கும் வரமுடியாது. அது பற்றிப் பேசுவதே கற்பனாவாதமாகத்தான் இருக்கும்.

### உபகுழுக்களின் சந்திப்பு

அரசும் விடுதலைப் புலிகளும் தமது தரப்பின் உயர் மட்டச் சந்திப்பின் மூலமாக ஆராய்ந்து உபகுழுக்கள் உருவாக்கப்பட்டன.

உயர்மட்டத்தில் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களைச் சுமுகமாகவும், திருப்திகரமாகவும் நடைமுறைப்படுத்த இந்த உபகுழுக்கள் தகுந்த கருவியாகத் தொழிற்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.


ஆனால், இது செயற்படுத்தப்படாவிட்டால் உபகுழுக்கள் தமது அர்த்தத்தை இழந்துவிடும். அமைதி முயற்சிகளுக்கும் உபகுழுக்களின் கூட்டங்களுக்கும் தொடர்பற்றவையாகிவிடும்.

எனவே, தேவையான உதவிகளையும், ஒத்தாசைகளையும் இந்தக் குழுக்களின் செயற்பாடுகளுக்கு வழங்கப்படவில்லை எனில், இவை அர்த்தமற்றுப் போகும் என்று நாம் கருதுகிறோம் இது பற்றி தாய்லாந்திலும் பேசப்படவுள்ளது.

### இராணுவத்தின் ஒத்துழைப்பு

சில விடயங்களில் இராணுவம் ஒத்துழைப்புத் தருவது உண்மையானது. கிழக்கிலும், வடக்கின் சில விடயங்களிலும் இராணுவத்தின் ஒத்துழைப்பு எமக்குக் கிடைத்தது.

ஆனால், உயர்பாதுகாப்பு வலயம் பற்றிய விவகாரங்க



நன்றி- 'டெய்லி மிரர்'

ளில்- இவ்வாறான பாதுகாப்பு வலயங்களை அதிகமாகக் கொண்டிருக்கும் யாழ்.குடாநாட்டில் - இராணுவத்தின் வலுகட்டாயமான நீண்டகால ஆக்கிரமிப்பு நெருக்கடிகளைத் தருவதாக உள்ளது.

யதார்த்தத்தின் அடிப்படையில் - யாழ்.பிராந்திய இராணுவத் தளபதியின் - கடுமையான நிலைப்பாடு - மீள் குடியமர்வுத் திட்டங்களுக்குத் தடைக்கல்லாகி வருகின்றது. யுத்தநிறுத்தத்தின் முதலாவது நாள் தொடக்கம் ஏற்றுக் கொள்ளப்பட்ட இந்த விவகாரம் - இன்று பெரும் பிரச்சினைக்குரியதாக உருவாகியிருக்கிறது. ஆனால் - யாழ்.இராணுவத்தளபதியோ இன்னமும் கடும்நிலைப்பாட்டிலேயே இருக்கின்றார்.

எனவே - இந்த விவகாரத்தை இனி அரசாங்கத்திடமே விட்டுவிடுவதென நாம் தீர்மானித்திருக்கிறோம். மக்களது ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த அரசாங்கத்திற்கு எதிராக - அதன் கீழுள்ள அமைப்பொன்று சுயாதீனமாக ஈடுபட முடியாது.

இது மக்கள் அளித்த தீர்ப்புக்கு முரணானதாக அமைந்துவிடும். இந்தவகையில் - இந்த நாட்டு மக்களுடைய எதிர்பார்ப்புக்கு விரோதமாகவே யாழ்.இராணுவத் தளபதி நடந்து வருவதாகக் கூறமுடியும்.

### அரசியற் தீர்வு

இன்றைய சூழ்நிலையில் - தீவிரமாக அரசியல் விவகாரங்கள் பற்றி ஆராய்வது - தகுந்த காலத்திற்கு முந்திய செயற்பாடாகவுள்ளது. போர் முடிவுற்று - அதனால் ஏற்பட்ட பாதிப்புக்கள் நீங்கி - மனிதாபிமான விடயங்கள் முதலில் கருத்திலெடுக்கப்பட வேண்டும். துப்பாக்கிகள் ஓய்ந்த அமைதியின் விளைவுகளை முதலில் மக்கள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இவை நிறைவேற்றப்படாமல் - மக்களுடைய நம்பிக்கையை வெற்றி கொள்ளமுடியாது. நம்பிக்கையை கட்டியெழுப்பப்படுவதற்காக இன்னும் ஏராளம் செய்ய வேண்டியுள்ளது.

மீள்குடியமர்வு போன்ற இலகுவாகத் தீர்க்கப்பட வேண்டிய விவகாரங்களே தீர்க்கப்படாமல் - நாம் மேலும் ஆழமாக இறங்க முடியாது.

ஒருவருட யுத்த நிறுத்தத்தின் பின்னரும் நாம் மனிதாபிமானப் பிரச்சினைகள் பற்றியே ஆராய்ந்து வரும்போது - தீவிரமான அரசியல் விவகாரங்கள் பற்றிப் பேசலாம் என்பது அர்த்தமற்ற செயற்பாடாகும்.

மக்கள் சுமுக வாழ்க்கைக்குத் திரும்புவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் பூர்த்தியானால் - நாம் அடுத்த கட்டத்திற்குள் இலகுவாகப் பிரவேசிக்கலாம்.

சமஷ்டி பற்றி இப்போது பேசுவதற்கான காலம் கனியவில்லை. அத்தகைய தீர்வொன்றையே நாம் இறுதியாக நம்புகின்றோம். ஆனால் - எவ்வாறான தீர்வு கிடைக்குமென தற்போதே எதிர்பார்ப்பது பொருத்தமற்றது.

எனவே - இன்று ஆரம்பமாகும் பேச்சுக்களிலும் நாம் மனிதாபிமான விடயங்களுக்கே முதலிடம் கொடுத்து அவற்றின் செயலாக்கம், அதற்குள்ள தடைகள் பற்றியே அதிகம் கலந்துரையாடவுள்ளோம். ★

# ஆதரவற்று வாழும் பிஞ்சுகளுக்கு அடைக்கலந்தரும் சைவ வித்தியா விருத்திச்சங்க சிறார் இல்லம்!

**யாழ்.திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்கச் சிறுவர் இல்லத்தின் திட்டப் பணிப்பாளர் கலாநிதி திருமதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்களுடனான நேர்காணல் இது.**

*கேள்வி:-* திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் சிறுவர் இல்லத்திட்டப் பணிப்பாளராக நீங்கள் பதவியேற்றபோது அதன் செயற்பாடுகள் எவ்வாறிருந்தது?

*பதில்:-* நான் இவ்இல்லத்தைப் பொறுப்பேற்கும்போது அங்கு 385 சிறார்கள் இருந்தார்கள். ஆனால், நிதிநிலைமை மிகவும் மோசமாகவே இருந்தது. ஆனால், இல்லத் திட்டப் பணிப்பாளர் என்ற முறையில் அந்தச் சிறுவர்களைப் பராமரிப்பதற்கோ, நாளாந்த உணவு கொடுப்பதற்குரிய பணத்தைத் திரட்டுவதற்கோ அல்லது எதிர்காலத்தில் அவர்களுக்கு எத்தகைய வசதிகளைச் செய்து கொடுக்கலாம் என்பதைப் பற்றியோ சிந்திக்க முடியாத ஒரு நிதி நிலைமையில்தான் அது எங்களிடம் கையளிக்கப்பட்டது.

இங்குள்ள சிறுவர்களுக்கென்று அரசாங்கம் கொடுக்கின்ற பணம் மிகக்குறைவானது. அதாவது, ஒரு பிள்ளைக்கென அரசாங்கம் தலா 100 ரூபாவையே வழங்கி வருகின்றது. அந்தப் பணம் அடுத்த வருட முடிவில்தான், செலவுகள் எல்லாம் முடித்து அவர்களுடைய கணக்காய்வு முடிந்த பின்னர்தான் கொடுப்பது வழக்கம். இருந்தும் இங்குள்ள சிறுவர்களின் தொகை அதிகமாக இருப்பதால் - அவர்களுக்கென ஒதுக்கப்படுகின்ற பணத்திலிருந்து அரைவாசித் தொகையை முற்பணமாகப் பெறக்கூடிய வாய்ப்பும் இருக்கிறது.

அந்த வசதியை நாங்கள் பயன்படுத்தி, அடுத்த ஆண்டுக்குரிய பணத்திலே ஒரு இலட்சம் ரூபாவை முற்பணமாகப் பெற்று, அந்த இல்லத்தை நடாத்துகின்ற பொறுப்பை நானும் என் கணவர் பேராசிரியர் சண்முகதாஸ்"மாக ஏற்றுக்கொண்டோம். ஆரம்ப காலகட்டத்தில் நான் இவ் இல்லத் திட்டப் பணிப்பாளராக வந்தபோது, இல்லத்தில் இருந்த நிதி நிலைமை இவ்வாறு பெரிதும் பற்றாக்குறையாகவே இருந்தமை குறிப்பிடப்படவேண்டியது.

ஆனால், இந்த ஒரு இலட்சம் ரூபாவும் போதாமல் இருந்ததன் காரணமாக, சிலவேளைகளில் எங்களுடைய சொந்தப் பணத்தையும் இந்தப் பிள்ளைகளினுடைய பராமரிப்புக்கு முற்பணமாகச் செலுத்தி, அந்தச் சிறுவர்களைப் பராமரிக்கின்ற பொறுப்பை ஏற்று நடாத்தி வருகின்றோம். தற்போது ஏறக்குறைய 10 வருடங்கள் ஆகிவிட்டன. ஆனால், இதைப் பின்னோக்கிப் பார்க்கும்போதுதான் - இதனுடைய உண்மை நிலைப்பாட்டை மக்கள்




நினைத்துப் பார்ப்பார்கள்.

*கேள்வி:-* இந்த இல்லத்திலே சிறுவர்களை இணைத்துக் கொள்வதற்கென இருக்கின்ற நடைமுறை பற்றி....?

*பதில்:-* இங்கே சிறுவர்களை சைவ வித்தியா விருத்திச் சங்கம் நேரடியாக அனுமதிப்பதில்லை. இங்கு சேர இருக்கின்ற பிள்ளைகளை அவரவர் வதியும் பிரதேச செயலகத்தின் சிபார்சுகள் மூலமாகவே நடைமுறைப்படுத்துவோம். இவ்வாறு சிபார்சுகள் ஏற்றுக் கொள்ளப்படும்போது - அவர்களுடைய பெற்றோருடைய விபரம், பாதுகாவலருடைய விபரம் யாவற்றையும் பெற்று, அவற்றைப் பகுப்பாய்வு செய்த பின்னர்தான் இங்கே சிறுவர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

குறிப்பாக, அங்கவீனர்களான பிள்ளைகளையோ அல்லது நோயாளர்களான மற்றும் வேறு வகையில் மன உளைச்சல்களுக்கு உள்ளானவர்களையோ அவர்கள் அனுப்புவதில்லை. நாம் - தாய் அல்லது தகப்பன் அற்ற பிள்ளைகள் அல்லது பெற்றோர்கள் இருவரும் அற்ற பிள்ளைகள் அல்லது வறுமைக் கோட்டிற்கு உட்பட்ட பிள்ளைகளையே உள்வாங்குகிறோம். இதிலும் முக்கியமாகத் தாய், தந்தையர்கள் அற்ற பிள்ளைகளைத்தான் முன்னுரிமை அடிப்படையில் சேர்த்துக் கொள்வோம்.

*கேள்வி:-* போர்க்காலச் சூழ்நிலைகளால் ஏற்பட்ட இடப்பெயர்வுகளின்போது இல்லத்துச் செயற்பாடுகள் எவ்வாறு இருந்தன?

*பதில்:-* 1993 ஆம் ஆண்டு எங்களால் பொறுப்பேற்கப்பட்ட இவ் இல்லம் 1995 ஆம் ஆண்டு சிறந்த வளர்ச்சியைப் பெற்றது என்று பலரும் கூறினார்கள்.

ஆனால், 95 ஆம் ஆண்டு ஏற்பட்ட இடப்பெயர்வு இந்த இல்லத்தினுடைய வளர்ச்சியில் ஒரு பின்னடைவையே ஏற்படுத்தியது.

இவ்வில்லத்தினுடைய வளங்களையெல்லாம் விட்டுவிட்டு பெற்றோர், பாதுகாவலர்களிடம் ஒப்படைக்கக்கூடிய நிலையில் இருந்த பிள்ளைகளையும் அவர்களிடம் ஒப்படைத்து விட்டு, 19 பிள்ளைகளோடு இடம்பெயர்ந்து வன்னிக்குச் சென்றோம். அங்கு கரைச்சி சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் குருகுலத்தில் 6 மாதங்களாகத் தங்கியிருந்து, எமது பிள்ளைகளைப் பராமரித்து வந்தோம். அதனாலேயே இந்தச் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் பணி தடைப்படாமல் இருந்தது.

மீண்டும் 96 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து, தொடர்ந்து பணியைச் செய்யத் தொடங்கினோம். 97 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரையும் இந்த சங்கத்தினுடைய வளர்ச்சி பல்வேறு படிமுறைகளில் நடைபெற்றிருக்கிறது, தொடர்ந்தும் நடைபெற்று வருகின்றது.

*கேள்வி:-* இங்குள்ள சிறுவர்களைப் பராமரிப்பதற்கு உரிய நிதி வளங்கள் எவ்வாறு கிடைக்கின்றன?

*பதில்:-* அரசாங்கத்தால் ஒரு பிள்ளைக்குரிய செலவீக மாதமொன்றிற்கு 100 ரூபா வழங்கப்பட்டு வந்தது. அந்நிதி போதுமானதாக இல்லாமையால், தற்போது அந்நிதி 300 ரூபாவாக அதிகரிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. ஆனால், ஒரு பிள்ளைக்கு ஒரு நாளைக்கு 60 ரூபாவரை உணவுக்காக மட்டும் செலவாகிறது.

இந்நிலையில் அரசினால் வழங்கப்படுகின்ற நிதியில் பற்றாக்குறை நிலவினாலும், நாம் அரசாங்கத்தால் வழங்கப்படுகின்ற பணத்தை வேண்டாம் என்று மறுத்துவிடவில்லை. காரணம் - அரசாங்கத்தால் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக இது இயங்குவதால், இங்குள்ள பிள்ளைகளைப் பராமரிக்க வேண்டும் என்கின்ற பொறுப்பு அரசுக்கு இருக்கவேண்டும் என்பதே எமது நோக்கமும் நிலைப்பாடும் ஆகும்.

*கேள்வி:-* இது தவிர வேறு அமைப்புக்கள், தனியார்கள் நிதி வழங்க முன்வருவதில்லையா? அவை பற்றி....?

*பதில்:-* உள்நாட்டு, வெளிநாட்டுக் கொடையாளர்களும் குறிப்பாகப் புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் தமிழர்களும் தமது கொடை நிதியங்களை வழங்கி வருகின்றார்கள்.

இதன் சிறப்பம்சம் என்னவென்றால், இவ்வில்லத்தில் தங்கியிருந்து கல்வி கற்றுத் தற்போது கனடாவில் வசிக்கின்ற விவேகானந்தன் என்பவர், எங்களுடைய பிள்ளைகளின் செலவுகளில் 1/3 பங்கினை வழங்கிக் கொண்டிருக்கிறார். சென்ற ஆண்டில் இருந்து ஒவ்வொரு ஆண்டும் தீபாவளிப் பண்டிகைக்குப் புத்தாடை அணிந்து விழாவைக் கொண்டாடி மகிழ்விக்க பணம் அனுப்பிக் கொண்டிருக்கிறார். அந்தவகையிலே இவ்வில்லத்தில் பயிற்றப்பட்ட ஒருவரால் ஆற்றப்படும் தொண்டு அளப்பரியதே.

இவைதவிர, லண்டனில் இருக்கின்ற ஸ்ரீ கனகதுர்க்கா ஆலயம் 37 சிறார்களுக்கான பராமரிப்புச் செலவையும், முத்துமாரி அம்மன் ஆலயம் 25 சிறார்களுக்கான பராமரிப்புச் செலவையும் வழங்குகிறது.

மேலும் அவுஸ்ரேலியாவில் இருக்கின்ற ETA என்ற அமைப்பு



*கலாநிதி*
*மனோன்மணி சண்முகதாஸ்*

மூலம் 35 சிறார்களுக்கான பராமரிப்புச் செலவு கிடைக்கிறது. மிகுதிச் சிறார்களுக்கான பராமரிப்புச் செலவு உள்நாட்டு, வெளிநாட்டுக் கொடையாளர்களால் கவனிக்கப்பட்டு வருகிறது. லங்கா அக்றொக்சன் நிறுவனமும் கொடைகளைச் செய்து வருகிறது.


சிறார் இல்லத்தின் வீட்டுத்தோட்டத்தினால் வருடத்திற்கு 20 ஆயிரம் ரூபாவும் வருமானமாகவும் பெறப்படுகிறது. இது இங்குள்ள சிறார்களின் தன்னார்வ முயற்சியையும் வளர்ப்பதற்குத் துணையாவதும் குறிப்பிடத்தக்கது.

*சந்திப்பு:*
**சுதர்மன் - சதீஸ்**

# கந்தளாயில் ஆயிரம் வருடங்களுக்கு முற்பட்ட தமிழ் மொழியிலான கல்வெட்டு கண்டு பிடிப்பு!

தமிழர்களின் சுயநிர்ணயத்தை அங்கீகரிக்கவும், தமிழர் ஓர் தேசிய இனம் என ஐக்கிய நாடுகள் சபை ஏற்றுக்கொள்ளவும், அந்த இனத்துக்கு இருக்கவேண்டிய ஐந்து விடயங்களில் வரலாற்று எச்சமும், கலை, கலாசார அம்சமும் ஒன்றாகும். இதனடிப்படையில் தமிழர்களின் வரலாற்றையும், கலாசார பண்பியலையும் நிதர்சனப்படுத்தும் ஓர் வரலாற்றுக் கண்டுபிடிப்பு அண்மையில் இடம் பெற்று இருப்பது பெரிதும் வரவேற்கத்தக்க முயற்சியாக அமைகின்றது. அத்துடன், எமது பிரதேச கல்விமான்களின் அறிவுத் தேடலையும், புதிய கண்டுபிடிப்புக்களைச் செய்து தமிழரின் தொன்மையை உலகிற்கு உணர்த்தவேண்டும் என்ற அவாவையும் சமூகத்துக்கு உணர்த்துகின்றது எனக் குறிப்பிடமுடியும்.

சமாதானச் சூழ்நிலை ஏற்பட்ட பின்னர் வட - கிழக்குப் பகுதி, பல்வேறு சமூகத்தவர் ஒன்றுசேர்கின்ற பிரதேசமாக மாற்றம் பெற்றுவிட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் எமது பண்பாட்டையும், தொன்மையையும் இல்லாமல் செய்யும் நோக்குடன் செயற்படும் சில சக்திகளால் எங்களுடைய எச்சங்களான அருமபொருட்கள், தொல்லியல் சானறுகள் தமிழர் பகுதிகளை விட்டு, தென்பகுதிக்கு விரைவாகக் கொண்டு செல்லப்படுகின்றன. இச்சூழ்நிலையில் எமது இனித்தை விழிப்படையச் செய்யவும், எமது வரலாற்றை நாமே பாதுகாக்கச் செய்யும் தூண்டலாகவும் சமூகத்தின் பல்வேறு அமைப்புகள், கல்விமான்கள், வரலாற்றாசிரியர்கள் பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். அந்த வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்



**5 அடி நீளமும், 2 அடி அகலமும் கொண்டதும், தமிழ், கிரந்த எழுத்துக்களால் பொறிக்கப்பட்ட கல்வெட்டு.** *(படம் - பரமு புஷ்பரட்ணம் வரலாற்றுத்துறை, யாழ்.பல்கலைக் கழகம்)*

கழக முதுநிலை விரிவுரையாளரும், தொல்லியல் ஆய்வாளருமாகிய கலாநிதி பரமு புஷ்பரட்ணத்தின்

## செய்திக் கட்டுரை



வரலாற்றுத் தேடலின் அண்மைய பொக்கிஷமாகவும், சான்றாதாரமாகவும் கண்டுபிடிப்பு ஒன்று இடம் பெற்றுள்ளது.

வரலாற்றிலக்கியங்களில் திருகோணமலையின் எல்லைக் கிராமமாகக் கூறப்படும் கந்தளாய் பேராற்றிற்கு அருகிலுள்ள புராதன சிவன் ஆலய வழிபாடுகளிடையே, இற்றைக்கு 1100 வருடங்களுக்கு முற்பட்ட தமிழ்க் கல்வெட்டொன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இக்கல்வெட்டைக் கடந்தவாரம் - யாழ்.பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி பரமு புஷ்பரட்ணம் தலைமையில் சென்ற கலாநிதி தருமராஜா, மயூரன், வேலவன், ரவீந்திரகுமார் குழுவினர் பேராற்றில் மேற்கொண்ட தொல்லியல் மேலாய்வின் போது கண்டுபிடித்தனர். 5 அடி நீளமும், 2 அடி அகலமும் கொண்ட இக் கல்வெட்டு, தற்போது உடைந்த நிலையில் காணப்பட்டாலும், எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பகுதி முழுமையாகவும், தெளிவாகவும் உள்ளது. எட்டு வரிகளைக் கொண்ட இக்கல்வெட்டு, தமிழ் மற்றும் கிரந்த எழுத்துக்களால் எழுதப்பட்டுள்ளது.

இக்கல்வெட்டில் கூறப்பட்டுள்ள செய்திகளை அடிப்படையாகக் கொண்டு, கி.பி. 12ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அதாவது கி.பி. 1103ஆம் ஆண்டு பொறிக்கப்பட்டது என்பதையும், அக்காலத்திலேயே இவ்விடம் கந்தளாய் என்ற பெயரால் அழைக்கப்பட்டதையும், சோழர் காலத்தில் இவ்விடத்தில் இருந்த சதுர்வேதி மங்களம் என்ற பிராமணரது குடியிருப்புக்கள் பிற்காலத்திலும் தொடர்ந்து இருந்ததையும், அங்கிருந்த சதுர்வேதி மங்களத்திற்கு பொலநறுவையில் ஆட்சி புரிந்த விஜயபாகு தனது 37 ஆட்சி யாண்டில் தானமளித்தான் என்பதையும் அறியமுடிகின்றது.


இக்கல்வெட்டு சோழர் ஆட்சியைத் தொடர்ந்து பொலநறுவையில் ஆட்சிபுரிந்த சிங்கள மன்னர்கள், தமிழர்கள் வாழ்ந்த இடங்களில் - தமது அரசியல், வர்த்தக, பண்பாட்டுத் தொடர்புகளைத் தமிழில் மேற்கொண்டார்கள் என்பதற்கு மேலும் ஒரு முக்கிய சான்றாக அமைகின்றது. இதுபோன்ற தமிழ்க் கல்வெட்டுக்கள் 1930 களிலும் 1972 களிலும் கண்டுபிடிக்கப்பட்டு இருப்பதுடன், இவ்விடத்திலிருந்து புராதன சிவாலயம் இருந்ததற்கான கட்டட அழிபாடுகளும், விக்கிரகங்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இச்சிவாலயம் ஈழத்தில் இருந்த மிகப்பெரிய புராதன ஆலயமாக இருக்கலாம் என்பதை அண்மையில் இவ்வாலய அழிபாடுகளுக்குத் தொடர்ச்சியாகவுள்ள அக்கிரபோதி மகாவித்தியாலயம் அமைந்துள்ள காணியில் நீர்த்தொட்டி அமைப்பதற்காக நிலத்தை அகழ்ந்தபோது, வெளிவந்த செப்புத் திருமேனிகளும், விக்கிரகங்களும், ஆலயத் தூண்களும் சான்றுபகர்கின்றன. அவற்றுள் - அங்கு கண்டெடுக்கப்பட்ட செப்புத் திருமேனிகளுக்கு என்ன நடந்ததென்பது இதுவரை தெரியவரவில்லை. அவற்றைத் தவிர, 1930களில் இவ்விடங்களில் கண்டு பிடிக்கப்பட்ட தமிழரின் வரலாற்றுப் பெறுமதிமிக்க ஏனைய தொன்மைச் சான்றுகள் கூட இதுவரை பாதுகாக்கப்படாது அவை வீதியோரங்களிலும், பற்றைக் காடுகளுக்கு மத்தியிலும் சீரழிந்துகொண்டு இருப்பதைக் காணமுடிகின்றது.

எனவே - இந்த தொல்லியல் எச்சங்களைப் பாதுகாப்பதும், அதனைச் சேகரிப்பதும், தமிழரது கடமையும், பொறுப்புமாகும். தமிழர்சார் அமைப்புகள், கல்விமான்கள்; அறிஞர்கள் இதனை தகுந்தமுறையில் கருத்திற் கொண்டு, மிக விரைவாக செயற்பட வேண்டிய காலம் இதுவேயாகும்.


**புராஜசிங்கம் இராஜேஸ்வரன்**

# அணுவாயுதங்களைக் கையாள்வதற்கு இந்தியாவில் புதிய கட்டளையமைப்பு


வாஜ்பாய்

இந்திய அரசாங்கம் தனது அணுவாயுதங்களைக் கையாள்வதற்கென முறைசார்ந்த கட்டளை அமைப்பு ஒன்றினை உருவாக்கியுள்ளது. இக்கட்டளை அமைப்பு அரசாங்க உயர் நிறைவேற்று அதிகாரிகளும் அரசியற் தலைவர்களும் இணைந்தவகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

அதேவேளை- அரசியற் சபை உறுப்பினர்களும் நிறைவேற்று அதிகாரசபை உறுப்பினர்களும் இணைந்து கூட்டு முயற்சியின் அடிப்படையில் தமது வேலைத் திட்டத்தினை மேற்கொள்ளவுள்ளனர். அரசியற் சபைக்கு இந்தியாவின் பிரதமர் தலைவராக நியமிக்கப்படுவார். மற்றைய உயர் நிர்வாக அதிகாரிகள் சபைக்கு தேசிய பாதுகாப்பு ஆலோசகர் தலைவராக நியமிக்கப்படுவார்.


அதி நவீன இந்திய ஏவுகணை ஒன்று

மேற்படி கட்டளை அமைப்பானது, அணுவாயுதங்களைப் பாவிப்பதற்கான அதிகாரத்தினை வழங்கும் ஒரு கட்டமைப்பு மாத்திரமே தவிர- இந்தியாவின் அணுவாயுத உற்பத்தி, மற்றும் அதன் அபிவிருத்தி தொகுதியில் எவ்விதக் கட்டுப்பாடுகளையும் கொண்ருக்காது.

# உலகவலம்

# துப்பாக்கி நபர்களின் தாக்குதலில் அல்ஜீரியாவில் 40 படையினர் பலி



வன்செயல் தொடரும் அல்ஜீரியா

அல்ஜீரியாவின் புறம்போக்கான பிரதேசத்தில் இனந்தெரியாத துப்பாக்கி நபர்கள் மேற்கொண்ட தாக்குதலில் நாற்பதிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

இத்தாக்குதல் சம்பவம் நிகழ்ந்த இடத்திற்கு அண்மையில் இடம்பெற்ற பிறிதொரு தாக்குதலில் பதின்மூன்று பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

இவ்வாறான தாக்குதல்கள் அல்ஜீரிய இராணுவத்தினர் மீது நடைபெறுவது வழமையானது என்றபோதும், மேற்படி தாக்குதல்கள் பலத்த சேதங்களை இராணுவத்தினருக்கு விளைவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# வெனிசுலா ஜனாதிபதி சாவேஸை ஆதரிப்பவருடன், எதிரணி மோதல்

(வெனிசுலா)

வெனிசுலாவின் தலைநகர் ஹரக்ஸில் ஜனாதிபதி சாவேஸின் ஆதரவாளர்களுக்கும் எதிர்ப்பாளர்களுக்கும் இடையில் நடைபெற்ற கலகத்தில் இரண்டு கலகக்காரர்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.


கலகக்காரருடன் மோதும் பொலிஸார்


மேற்படி இருவரும் சூட்டுக்காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் அங்கு இறந்ததாகவும், மேலும்- ஆறு நபர்கள் சூட்டுக்காயங்களுக்கான சிகிச்சையினை வைத்தியசாலையில் பெற்றுவருவதாகவும் வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை- கலகத்தினை அடக்குவதற்காக மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில்- இறப்பர் ரவைகளையும் கண்ணீர்ப்புகைக்குண்டுகளையும் பயன்படுத்தியே இருதரப்பினரையும் தாம் பிரித்தெடுத்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை- ஜனாதிபதி சாவேஸை பதவியிலிருந்து அகற்றும் வரை போராட்டம் தொடருமென எதிரணியினர் அறிவித்துள்ளனர்


வலுக்கின்றது எதிர்ப்பு

# மூன்று குளோனிங் குழந்தைகள் அடுத்த மாதம் பிறக்குமாம்!


பி.பி.சி நேர்காணலில் பொய்ஸெலயர்

இரண்டு குளோனிங் குழந்தைகளை உருவாக்கிய அமெரிக்க வைத்திய நிபுணர் பிரிஜிற் பொய்ஸெலயர், தான் மேலும் மூன்று குளோனிங் குழந்தைகளை உருவாக்கியுள்ளதாகவும், அக்குழந்தைகள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் பிரசவிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

மேற்படி கூற்றானது உலகிலுள்ள உயிரியல் விஞ்ஞானிகள், சட்ட நிபுணர்கள், மதத்துறையினரை ஆழ்ந்த குழப்பத்திற்கு உள்ளாக்கியுள்ளது. இவர்கள் குளோனிங் குழந்தை உருவாக்கத்திற்கு உலகளாவிய தடையினைக் கொண்டுவரவேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பாக்.எல்லைக்குள் தாக்குதல் நடத்த அமெரிக்காவுக்கு அனுமதியில்லை!

## பாகிஸ்தான் தகவல்துறை அமைச்சர் அறிவிப்பு

தனது நாட்டு எல்லைகளுக்குள் அமெரிக்கப்படைகள் அத்துமீறி நுழைந்து- தலிபான் மற்றும் அல்கெய்டா அமைப்புக்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கு தான் அனுமதியளிக்கவில்லை என பாகிஸ்தான் அரசாங்கம் அறிவித்துள்ளது.

பாகிஸ்தானிய தகவல்துறை அமைச்சர் இத்தகவலை வெளியிட்டுள்ளார்

இதேவேளை- ஆறு இஸ்லாமிய மதவாத அமைப்புக்கள் இணைந்து பாகிஸ்தானில் தேசியரீதியில் அமெரிக்காவிற்கு எதிரான பேரணியை நடத்தியுள்ளன. இவ் எதிர்ப்புப் பேரணியின் பல்வேறு இடங்களில் அமெரிக்கத் தேசியக்கொடி எரிக்கப்பட்டிருக்கின்றது.

இதேவேளை- அமெரிக்க இராணுவப்பேச்சாளர், பாகிஸ்தான் எல்லைக்குள் தமது இராணுவம் வலுக்கட்டாயமாகச் சென்று தாக்குதல் நடாத்தாது. மாறாக- தம்முடனான மோதலின்போது அல்லது தாக்குதல் நடவடிக்கைகளின்போது பாகிஸ்தான் எல்லைக்குள் தமது எதிரணிகள் புகுந்துகொண்டால் அமெரிக்க இராணுவத்தினர், பாகிஸ்தானிய எல்லைக்குள் வைத்தும் போராட வேண்டிய நிர்ப்பந்தம் தவிர்க்க முடியாதது என தெரிவித்துள்ளார்.


எதிர்ப்பைச் சம்பாதிக்கும் அமெரிக்கப் படைகள்.

ஆப்கானிஸ்தானில் தலிபான்களுடனான யுத்தம் முடிவிற்கு வந்ததன் பின்பு அமெரிக்க இராணுவத்தினர் மூன்று தடவைகள் பாகிஸ்தான் எல்லைப் பிரதேசத்தில் தாக்குதல் நடத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காஷ்மீரில் தொடரும் மோதல் பதினொரு பேர் உயிரிழப்பு


காஷ்மீரில் இந்தியப்படைகள்

இந்திய நிர்வாகத்திற்குட்பட்ட காஷ்மீரில் வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற மோதல்களில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் உட்பட மூன்று பொலிசாரும், எட்டு காஷ்மீர்ப் போராளிகளும் இறந்துள்ளனர் என இந்திய பாதுகாப்புத்துறைப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பயணம் செய்த வாகனம் மீது மறைந்திருந்து மேற்கொள்ளப்பட்ட அதிரடித்தாக்குதலினால் அவர் கொல்லப்பட்டார். அத்துடன் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டிற்கு அண்மையில் இடம்பெற்ற பிறிதொரு சம்பவத்தில்- எல்லைக்காவல் படையினர் இருவர், காஷ்மீர் போராளிகளால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# தமிழர் புனர்வாழ்வு கழகத்துடன் ஜப்பான் அரசு இன்று ஒப்பந்தம்

## கொழும்பு ஹில்ரன் ஹோட்டேலில் கைச்சாத்தாகின்றது

(கொழும்பு)

ஜப்பானிய அரசு வடபகுதியில் செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு மனிதாபிமானப் பணிகளுக்கான நிதியுதவிகளை வழங்க முன்வந்துள்ளது.

நோர்வே அரசின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்படவிருக்கும் மக்கள் உதவித்திட்டத்தின் கீழ் இந்த நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

மேற்படி நிதி உதவி வழங்கப்படுவது சம்பந்தமாக இன்று கொழும்பில் ஹில்ரன் ஹோட்டேலில் நடைபெறவிருக்கும் வைபவம் ஒன்றில், சம்பந்தப்பட்ட அரச சார்பற்ற நிறுவனங்களுடன் ஜப்பானிய அரசு ஒப்பந்தங்களைச் செய்யவுள்ளது.

மனிதாபிமான செயற்பாடுகளுக்காகவும், கண்ணிவெடி அகற்றல் மற்றும் இப்பணிக்கான போக்குவரத்து வசதிகளைச் செய்வதற்காகவும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கு- 4 இலட்சத்து 63 ஆயிரத்து 647 அமெரிக்க டொலர்கள் வழங்கப்படவுள்ளது.

இது தொடர்பான ஒப்பந்தம் ஒன்று இன்று கைச்சாத்திடப்படவுள்ளது.

மேலும் கண்ணிவெடி அகற்றுவதற்காக யாழ்ப்பாணத்தில் செயற்படும் 'ஹலோ ட்ரஸ்ட்' என்ற 'அரசசார்பற்ற நிறுவனத்துடன், சுமார் 3 இலட்சத்து 53 ஆயிரத்து எண்ணூறு அமெரிக்க டொலர் வழங்கப்படுவதற்கான ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்படவுள்ளது.

இவற்றைவிட, வன்னியில் செயற்படும் கண்ணிவெடி அகற்றும் ஆலோசனைக்குழு என்ற நிறுவனத்துக்கு 3 இலட்சத்து 53 ஆயிரத்து 536 அமெரிக்க டொலர் வழங்கப்படவிருக்கிறது.

மேலும், வவுனியாவில் செயற்படும் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றுக்கு 80 ஆயிரத்து 968 அமெரிக்க டொலர் உதவியாக வழங்கப்பட இருக்கிறது. இது தொடர்பான ஒப்பந்தமும் இன்று ஜப்பானிய அரசாங்கத்தினால் கைச்சாத்திடப்படவுள்ளது.

(01)

# 'கவிக்கோ' அப்துல் ரகுமான் இன்று யாழ்.வருகின்றார்

(யாழ்ப்பாணம்)

தமிழகத்தில் புகழ் பெற்ற கவிஞர் 'கவிக்கோ' அப்துல் ரகுமான் நேற்று கொழும்பு வந்து சேர்ந்தார். இன்றுகாலை விமானம் மூலம் பலாலி வந்தடையும் 'கவிக்கோ' அப்துல் ரகுமானுக்கு பலாலி விமான நிலையத்தில் வைத்து தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தினர் அமோக வரவேற்பு அளிக்கவுள்ளனர்.

யாழ்ப்பாணம் வரும் 'கவிக்கோ' அப்துல் ரகுமான், சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் பிறந்தநாள் அறக்கொடை விழாவில் நாளை தெல்லிப்பளை துர்க்கையம்மன் ஆலயத்திலும் நாளை மறுதினம் நல்லூர் மணி மண்டபத்திலும் சொற்பொழிவுகளை ஆற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அச்சுறுத்தல் இன்றி தொழில் செய்ய அனுமதிக்குக

# கண்காணிப்புக்குழு - கடற்தொழிலாளர் வல்வை புலிகளின் அலுவலகத்தில் பேச்சு

(நெல்லியடி)

கடற்தொழிலாளர்கள் எந்த விதமான அச்சுறுத்தலும் இன்றி, சுதந்திரமாக - தொழில் செய்ய அனுமதிக்கப்பட வேண்டும். இல்லையேல் கடற்தொழில் சங்கங்கள் இணைந்து போராட்டம் நடத்துவோம் என,

வடமராட்சி கடற்தொழிலாளர் சங்கத்தினர், யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக்காலை 10.30 மணியளவில் வடமராட்சி அரசியற்துறை அலுவலகத்தில் கண்காணிப்புக் குழுவினருடன் நடைபெற்ற இச்சந்திப்பில், விடுதலைப் புலிகளின் கடற்புலிகளின் அரசியல் துறையைச் சேர்ந்த இனியவன், மகளிர் அரசியல் பிரிவைச் சேர்ந்த மலர்விழி, அன்பழகன், கல்யாணி ஆகியோரும் கடற்தொழிலாளர் சங்கங்களின் சமாசத் தலைவர் சூரியமூர்த்தி, செயலாளர் க.சூரியகுமார் மற்றும் கடற்தொழில் சங்கத் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பில்,

கடந்த 31ஆம் திகதி தொண்டைமானாறு கடறபரப்பில், கடற்தொழிலில் ஈடுபட்ட வள்ளத்தினை கடற்படையினர் மோதியுள்ளனர். இதனால் இருவர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஒருவரை இன்னமும் காணவில்லை.

இவ்வாறான துரதிஷ்ட சம்பவங்கள் இனிமேல் நடக்காது நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். காயமடைந்த குடும்பங்கள், காணாமற்போன குடும்பத்துக்கு மனிதாபிமான உதவிகளை வழங்க சம்பந்தப்பட்டவர்களுக்குத் தெரிவியுங்கள்.

மீனவர்கள் கடற்தொழிலில் ஈடுபடும் பிரதேசங்களில் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடும் கடற்படையினர்,

படகுகளின் வேகத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதுடன் வெளிச்சங்களுடனும் செல்ல வேண்டும்.

கடற்தொழிலில் ஈடுபடும் மீனவர்கள் காலை 10 மணிக்கு முன்பதாக கரைக்கு வராதவிடத்து அவர்களைத் தேட அனுமதிக்க வேண்டும் என கடற்தொழிலாளர்கள் தரப்பில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

மீனவர்களால் விடுக்கப்பட்ட இக்கோரிக்கைகள் தொடர்பாக அரசுக்குத் தெரிவித்து உரிய நடவடிக்கை எடுக்க வலிறுத்துவதாக, யுத்த நிறுத்தக் கண்காணிப்பு குழுவினர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(ச,15)

### உயர் பாதுகாப்பு...

பங்குபற்றுகின்றனர்.

அரசாங்கத்தரப்பில்- அமைச்சர்களான பேராசிரியர் ஜி.எல்.பீ ரிஸ், மிலிந்த மொறகொட, ரவூப் ஹக்கீம் மற்றும் பேனாட் குணதிலக மற்றும் வள அணியினரான ஒஸ்ரின் பெர்ணான்டோ மேஜர் ஜெனரல் சாந்த கொட்டே கொட ஆகியோர் கலந்து கொள் கிறார்கள்.

உயர் பாதுகாப்பு வலயங்கள் பற்றிய பேச்சுக்கள் இன்று இடம் பெற்றாலும் - இப்பிரச்சினை ஆழமான புரிந்துணர்வுடனேயே இரண்டு தரப்பினராலும் அணுகப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக, இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

முன்னதாக - இன்று ஆரம்பமாகும் பேச்சுக்களில் சமஷ்டி முறைமை பற்றியே ஆராயப்படவிருந்தபோதும் - விடுதலைப் புலிகளின் வேண்டுகோளின்படி, உயர் பாதுகாப்பு வலயங்கள் மற்றும் இடம்பெயர்ந்த மக்களின் மீள் குடியமர்வு பற்றிய விவகாரங்களே இன்று ஆராயப்படுகின்றன.

அதேவேளை - இன்று உப குழுக்களின் செயற்பாடுகள் பற்றியும் கலந்துரையாடப்பட இருந்தபோதும் - இந்த நிகழ்ச்சித்திட்டத்திலும் மாற்றம் செய்யப்பட்டிருப்பதாகவும் அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.இப்பேச்சுக்களின்போது, கனடாவின் சமஷ்டி தொடர்பான அமைப்பின் உறுப்பினர்களும் பார்வையாளர் வரிசையில் கலந்து கொள்ளவுள்ளனர்.

### குடாநாட்டு...

தைக் கேட்டு உயர்பாதுகாப்பு வலயம் தொடர்பாக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஒரு தீர்க்கமான முடிவெடுப்பார் எனத்தெரிவிக்கப்படுகிறது.

# குருநகரில் நான்கு வீதிகள் படையினரால் நேற்று திறப்பு

(யாழ்ப்பாணம்)

குருநகர், பாசையூர், கொழும்புத்துறை ஆகிய பகுதிகளில் மூடப்பட்டிருந்த நான்கு வீதிக ளைப் படையினர் நேற்றுக்காலை முதல் திறந்துவிட்டிருப்பதாக 512 ஆவது படையணி அறிவித்துள் ளது.

குருநகர் தொடர்மாடி வீதி, சீநோர் வீதி, முதலாம் குறுக்குத் தெரு, நெடுங்குளம் வீதி ஆகிய வீதிகளையே படையினர் நேற்றுக்காலை திறந்துவிட்டுள்ளதாக அறிவித்துள்ளனர்.

### கட்டாய...

கதிரைகளில் இருந்து கொண்டு விமர்சனங்கள் வெளியிடுவதை விடுத்து - களத்தில் இறங்கித் தாமும் அனைவருக்கும் சமமானவர்களாக மாற இது வொன்றே வழி. அமைதியோ, போரோ - இதன் மூலம் பெரும் சமூக சமத்துவமே உருவாகும் என்றும் அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்தார்.

### தெல்லிப்பளை...

இப்போராட்டத்தைத் தொடர்ச்சியாக நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது. வலி.வடக்குப் பொது அமைப்புக்களின் ஒன்றியம் இப்போராட்டம் குறித்தும் தமது கோரிக்கைகள் குறித்தும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைக்கவுள்ளது.

தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை இப்போராட்டம் தொடரும் என்று வலி.வடக்கு வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் அறிவித்துள்ளார்

## படகை மோதியது எதிர்பாராத சம்பவமாம்

(நெல்லியடி)

கடந்த 31 ஆம் திகதி தொண்டமனாறில் கடற்படையின் டோறாப்படகு மீனவர்களுடைய வள்ளத்துடன் மோதிய சம்பவம் எதிர்பாராத விபத்து என, கடற்படையினர் கூறியதாக யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்துளனர்.

நேற்றையதினம் வல்வெட்டித்துறை அரசியற்துறை அலுவலகத்தில் நடைபெற்ற மீனவர்களுடனான சந்திப்பிலேயே கண்காணிப்புக் குழுவினர் இதனைத் தெரிவித்தனர்.

தம்முடைய டோறாவில் பொருத்தப்பட்டிருந்த ரடாரில் சிறிய வள்ளங்கள் தெரியாதமையாலேயே இந்த விபத்து நடந்ததாக கடற்படையினர் கூறியதாக கண்காணிப்புக் குழுவினர் தெரிவித்தனர்.

இதற்கு மீனவர்கள் தரப்பில், கடலில் எந்த சிறிய பொருள் காணப்படுமாயினும் ரடார் கருவி அதனை இனங்கண்டு விடும் எனப்பதில் தெரிவிக்கப்பட்டது.

(ச,15,13)

# காரைநகரில் கரையொதுங்கிய இனந்தெரியாத ஆணின் சடலம்!

(யாழ்ப்பாணம்)

காரைநகர் கசூரினா கடற்கரையில் இனந்தெரியாத, சிதைவடைந்த சடலம் ஒன்று நேற்றுக் காலை கரையொதுங்கியது.

காரைநகர் கசூரினா கடற்கரைக்குச் சமீபமாக- நேற்றுக்காலை 6 மணியளவில் தலை, கழுத்துப்பகுதி மற்றும் கைகள் என்பன சிதைவடைந்த நிலையில், 30 வயது மதிக்கத்தக்க ஓர் ஆணின் சடலம் கரையொதுங்கியது. கழுத்தில் செபமாலை காணப்பட்டது.

ஒன்றின்மேல் ஒன்றாக இரண்டு ரீசேட்களும் நீலநிற அரைக்காற் சட்டையும் சடலத்தில் காணப்பட்டன.

# பொன்சேகாவின் திட்ட வரைபினால் கடற்படை - இராணுவம் முரண்பாடு

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டுக்கான படைத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா தயாரித்த திட்டவரைபு தொடர்பாக, இராணுவத்துக்கும் கடற்படைக்கும் இடையில் முறுகல்நிலையை தோன்றியிருப்பதாக தெரியவருகின்றது.

மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவின் உயர்பாதுகாப்பு வலயங்கள் தொடர்பான திட்டவரைபில், கீரிமலைப் பகுதியில் மீள்குடியேற்றம் தொடர்பாக பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

இந்தப் பிரதேசம் கடற்படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசம் என்றும், இது தொடர்பாக கடற்படை அதிகாரிகளுடன கலந்தாலோசனை செய்யாமல் - திட்ட வரைபை மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா தயாரித்துள்ளார் என்றும் கடற்படைத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இது இராணுவ - கடற்படை அதிகாரிகள் மத்தியில் கருத்து முரண்பாடுகளை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரியவருகிறது.

# முஸ்லிம் ஓட்டோ சாரதியின் சடலம் வெட்டுக்காயங்களுடன் மீட்பு

## கலவரத்தை தூண்டும் முயற்சியா எனச் சந்தேகம்

(வாழைச்சேனை)

மட்டு - வாழைச்சேனை கல்மடுப் பகுதியில் ஓட்டோ சாரதியான முஸ்லிம் ஒருவரின் சடலம் நேற்றுக்காலை மீட்கப்பட்டது.

60 வயதுடைய இஸ்மாயில் என்பவரது சடலமே வெட்டுக்காயங்களுடன் மீட்கப்பட்டது. இச்சடலம் தமிழர்கள் வாழும் கல்மடு என்ற இடத்தில் கண்டெடுக்கப்பட்டது.

இவர் வேறொரு இடத்தில் கொலை செய்யப்பட்ட பின்னர், கல்மடுப் பகுதியில் சடலமாகக் கொண்டு வந்து போடப்பட்டிருக்கலாம் எனவும், சம்பவ இடத்தில் கொலை நடந்ததற்கான தடயங்கள் காணப்படவில்லை எனவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இச்சம்பவத்தையடுத்து ஓட்டமாவடி, வாழைச்சேனை ஆகிய பகுதிகளில் பதற்றம் நிலவியது. இனக்கலவரத்தைத் தூண்டுவதற்கான முயற்சியாக இக்கொலை இடம்பெற்றிருக்கலாம் என அப்பகுதி மக்கள் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

# தாய்லாந்தில் முஸ்லிம்கள் விடயம் பேசப்படும் என்கிறார் ரவூப் ஹக்கீம் !

தாய்லாந்தில் நடைபெறும் நானகாவது சுற்று சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம் மக்களைப் பாதிக்கும் விடயங்கள் குறித்து கருத்துக்கு எடுக்கப்படலாம் என்று அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

தாய்லாந்தில் செய்தியாளருக்கு பேட்டியளித்தபோதே மேற்கண் டவாறு அவர் தெரிவித்தார்.

இம்முறை என்னுடன் சேர்த்து மூன்று முஸ்லிம் பிரதிநிதிகளும் வந்துள்ளமை - முஸ்லிம் மக்களின் பாதிக்கும் விடயம் பற்றி விவாதிப்பதற்கு முன்னேற்றமானதாகும்.

இதுபற்றி அரசியல் உபகுழுக்களிலும் பேச இருக்கிறோம் எனவும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் மேலும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள் நமது ஈழநாடு அச்சகத்தில் 06.01.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.